Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம 10

# ஈழநாடு

EELA NADU

National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 389

தபால் பெட்டி எண்: 49

லட ௪ யாழ்ப்பாணம். பிலவ வைகாசி 28 ஆம் நாள் துல்ஹஜ் 25 (10-6-61) சனிக்கிழமை இதழ் 100

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 / 303 / 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்-2.

## பார்லிமெண்டில்

# மாணவர் ஆர்ப்பாட்டம்

## ராஜரத்னுவை விடுதலை செய்ய கவர்னர் ஜெனரலுக்கு மகஜர்

கொழும்பு, வெள்ளி

**1958-ம் வருட கலக சம்பந்தமாக ஒரு வழக்கில் 18 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற வெலிமடை எம். பி. யான ராஜரத்னுவுக்கு மன்னிப்பளிக்க வேண்டுமென்று பல எம். பி. க்கள் கையொப்பமிட்ட ஒரு மகஜர் கவர்னர் ஜெனரலுக்கு அனுப்பப்படுகிறது.**

**நேற்றிரவு சுமார் நூறு மாணவ பிக்குகளும், இதர மாணவர்களும், பார்லிமெண்ட் முன் மண்டபத்துக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்து படுத்துக்கொண்டு, காலையில் கலைந்து சென்றனர்.**

"18 மாதக் கடுங்காவல் தண்டனை பெற்ற திரு. கே. எம். பி. ராஜரத்னுவுக்கு மன்னிப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு, கவர்னர் ஜெனரலுக்கு ஒரு மகஜர் தயாரிக்கப்பட்டு வருகிறது. அரசாங்கக் கட்சி எம். பி.க்கள் சிலர் உள்ளிட்டு பல எம். பி. க்கள் அதில் கையொப்பமிட்டுள்ளனர்" என்று காலி மெம்பர் திரு. தகநாயக்கா தெரிவித்தார். மன்னிப்பு அளிக்க

(5-ம் பக்கம் பார்க்க)

## பிச்சைஎடுக்கும்குழந்தைகளை பொலிசார் பிடிப்பார்கள்!

### சமூக சேவை மகாநாடு செய்த தீர்மானம்

கொழும்பு, வெள்ளி

தெருவிலே குழந்தைகள் யாரும் பிச்சை எடுத்தாலும் சரி, அல்லது பிறர் குழந்தைகளை பிச்சை எடுக்கப் பயன்படுத்தினாலும் சரி, அக்குழந்தைகளை பொலிசார் பிடித்து, குழந்தை கண்காணிப்பு சேவை அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிடலாம். சமூகசேவை இலாகாவில் சமீபத்தில் நடைபெற்ற ஒரு மகாநாட்டில் இவ்வித தீர்மானிக்கப்பட்டது.

தெருவில் பிச்சை எடுக்கும் குழந்தைகள் பல இம்சைகளுக்கும் ஆபத்துக்கும் உள்ளாக நேரிடுமென்பது மகாநாட்டின் ஏகோபித்த கருத்து.

## வெடிமருந்துக்கான லைசன்ஸ் அரசாங்க அதிபர்கள் வழங்குவர்

### பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு அறிக்கை

கொழும்பு, வெள்ளி

**வெடிமருந்துகளை வாங்குவதற்கான லைசன்ஸ், அனுமதிப்பத்திரம் ஆகியவற்றை வழங்கும் அதிகாரம், தமிழ்ப்பிரதேசங்களில் அரசாங்க அதிபர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.**

இதுசம்பந்தமாக பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் வெடிமருந்துக்கான லைசன்ஸ் அனுமதிப் பத்திரம் ஆகியன வழங்குவது, பாதுகாப்பு இலாகாவின் பொறுப் பாயிருந்த போதிலும், இவைகளைப் பெறுவதை எளிதாக்கும் நோக்கத்துடன் யாழ்ப்பாணம், திருக்கோணமலை, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு, ஆகிய இடங்களிலுள்ள அரசாங்க அதிபர்களுக்கு தனது பொறுப்புக்கள் சிலவற்றை நிரந்தரக் காரியதரிசி பாரப்படுத்தியிருக்கிறார் எனக் கூறப்பட்டுள்ளது. "லைசன்ஸ் அனுமதிப்பத்திரங்கள் வழங்குமாறு கோரி ஏராளமான கோரிக்கைகள் பாதுகாப்பு வெளிநாட்டு அமைச்சுக்கு வருகின்றன. இவர்கள் அந்தந்தப் பகுதி மாவட்ட அதிபர்களுக்கு தங்கள் விண்ணப்பத்தை அனுப்புமாறு கோரியிருக்கிறார்கள்" என்றும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் அறிக்கை கூறுகிறது.

## பிரதமர் ஸ்ரீமாவோவுக்கு நேருஜி மாம்பழங்கள் அனுப்பினார்

கொழும்பு, வெள்ளி

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இந்திய பிரதமர் ஸ்ரீநேரு இந்திய அரசாங்கத்தின் அன்பளிப்பாக மிக இனிப்பான இந்திய மாம்பழங்களை நேற்று அனுப்பி வைத்தார்.

பம்பாயிலுள்ள மாந்தோப்பிலே தேர்ந்தெடுக்கப்பட்ட 150 மாங்கனிகள் அப்பார்ஸலில் இருந்ததாகத் தெரிகிறது. இந்திய ஹைகமிஷனைச் சேர்ந்த ஓர் அதிகாரி அந்த மாம்பளப்பார்சலை நேரில் "டெம்பிள்டிரீஸ்" மாளிகையில் கொண்டு கொடுத்தார். இலங்கைப் பிரதமரிடம் நேரில் அதைக் கொடுக்கவேண்டுமென்று பிரதமர் நேரு கேட்டிருந்ததாகத் தெரிகிறது.

## இலங்கைப் பொருள்களை வாங்க வெளிநாடுகள் ஆவல்

கொழும்பு, வெள்ளி

இலங்கையில் தயாரிக்கப்பட்ட பல பொருள்களைவாங்க பல தென்கிழக்கு ஆசிய, ஆபிரிக்க, மத்தியகிழக்கு நாடுகள் ஆவல்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இந்தோனேஜியா, பர்மா, எகிப்து, ஈராக், கானு, நைஜீரியா முதலிய நாடுகள், இலங்கையில் தயாரிக்கப்பட்ட ஷர்ட்டுகள், பனியன்கள், சூட்கேஸ்கள், குடைகள், பிஸ்கோத்துகள், மிட்டாய்கள் முதலியன குறித்து உற்பத்தியாளரை விலைவிபரங்கள் கேட்டுள்ளன.

## கிராமசேவகர் பரீட்சை

### புதிய திருத்தம்

மாவிட்டபுரம், வெள்ளி

கிராமசேவகர்களுக்காக நடத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றும் கிராம விதானைமார்கள், 45 வயதுக்குட்பட்டும், கனிஷ்டதராதரப் பரீட்சையில் (ஜே. எஸ். சி.) சித்தியடைந்தும் இருக்கவேண்டும் என்ற விதி, தற்சமயம் மாற்றப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

புதிய விதியின்படி, கிராம சேவகர்கள் பரீட்சைக்குத் தோற்றும். கிராம விதானைமார்கள் கனிஷ்டதராதரப் பரீட்சையில் சித்தியடையாமலே இப்பரீட்சைக்குத் தோற்றலாம் எனத் தெரிகிறது.

இதற்கானவிண்ணப்பப்பத்திரம் ஏற்கும் திகதியும் இம்மாதம் 17-ந் திகதி வரை ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## "க்ஷயரோகிகளை ஒதுக்கி வைப்பது அநீதி"

### வலிகாமம் கிராமச் சங்கத்தில் செயலாளர் பேச்சு

யாழ்ப்பாணம், சனி

"க்ஷயரோகத்தினால் பீடிக்கப்பட்டவர்களைச் சமுதாயத்திலிருந்து ஒதுக்கி வைப்பது பெரும்அநீதியாகும். க்ஷயரோகிகளுக்கு உதவுவதும் புனர்வாழ்வளிப்பதும் நமது பிரதான கடமையாகும்"

இவ்வாறு இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்கு கிளைச்செயலாளர் திரு. உ. ந. தேவகடாட்சத்தினால் க்ஷயரோக கல்வித்தினத்தை முன்னிட்டு வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வறிக்கையில் அவர் தொடர்ந்து கூறியிருப்பதாவது:-

க்ஷயரோகத்திற்கு எதிரான நமது ஆயுதம் அறிவே. இது கவலையீனத்தாலும் அறியாமையாலும் வளர்கிறது. இலங்கை மக்களின் சௌக்கிய முதற் சத்துரு க்ஷயரோகம். இது பரம்பரை வியாதியல்ல இது மாற்றக்கூடிய வியாதி. எவரையும் எங்கேயும் தாக்கக்கூடியது. க்ஷயரோகத்தைக் குணப்படுத்தலாம், பரவாது தடுக்கலாம். க்ஷயரோகத்தை ஒழிப்பதற்கு நாம் யாவரும் ஒன்றுபட்டால்தான் முடியும்.

### வானொலியில் நிகழ்ச்சி

க்ஷயரோக கல்வித்தினத்தைக் கொண்டாடுமுகமாக இலங்கை க்ஷயரோக நிவாரண தேசிய சங்கத்தின் வலிகாமம் மேற்குக் கிளையின் ஆதரவில் இலங்கை வானொலி தேசிய ஒலிபரப்பில் விசேஷ நிகழ்ச்சிகள் ஏற்பாடாகியிருப்பதாகத் தெரிகிறது. இந்நிகழ்ச்சிகளில் திரு. உ. ந. தேவகடாட்சம் தலைமையில் ஓர் கோஷ்டி இச்சங்கத்திலிருந்து இன்று பங்கு பற்றுகிறதென அறிவிக்கப்படுகிறது.

## கூட்டுறவுச் சங்கங்கள் பங்குகளை வாங்கியவுடன் மக்கள் வங்கி இயங்க ஆரம்பிக்கும்

கொழும்பு, வெள்ளி

**மக்கள் வங்கியில் கூட்டுறவுச் சங்கங்கள் பங்குகளை வாங்குவது பூர்த்தியானவுடன் அது இயங்க ஆரம்பிக்கும் என்றும், எனவே இவைகளைச் சீக்கிரம் வாங்குமாறு கூட்டுறவுச் சங்கங்களைக் கேட்டும் கூட்டுறவு அபிவிருத்திக் கமிஷனர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.**

"மக்கள் வங்கி மசோதா சட்டமாகிவிட்டது. கூட்டுறவாளர்களும், கூட்டுறவுச் சங்கங்களும் பங்குகளை வாங்கியவுடன் வங்கி இயங்க ஆரம்பிக்கும். பங்கு ஒன்றுக்கு 50 ரூபாய் வீதம் 1,20,000 பங்குகளை மக்கள் வங்கி கொண்டிருக்கும். இவற்றில் அரைவாசி கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. மிகுதி அரசாங்கத்துக்குரியவை.

மக்கள் வங்கி பெடரல் வங்கியின் பொறுப்பை ஏற்கும். கூட்டுறவு இயக்கத்தை அபிவிருத்தி செய்வதே இந்த நடவடிக்கையின் நோக்கம். இயன்றவரையில் பங்குகளை வாங்குமாறு சகல கூட்டுறவுச் சங்கங்களையும் கேட்டுக்கொள்கிறேன்" என்றும் அவரது அறிக்கை கூறுகிறது.

## ஆதாரப்பயிற்சி கல்லூரியில் சேர 8-ம் வகுப்பு தராதரம்

கொழும்பு, வெள்ளி

"ஆதாரப் பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்கான சோதனைக்குரிய தராதரம் 8-ம் வகுப்பாக உயர்த்தப்பட வேண்டுமென்று இரத்மலானையிலுள்ள ஆதாரப் பயிற்சிக் கல்லூரி உதவித் தலைமை என்ஜினியர் திரு. டபிள்யு ஒ. பெர்னண்டோ தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் நலன் கருதியே தாம் இவ்வித அபிப்பிராயம் கொண்டுள்ளதாக திரு. பெர்னண்டோ அறிவித்துள்ளார். அவர் தமது 1960 ம் ஆண்டு நிர்வாக அறிக்கையில் தெவிப்பதாவது:-

போதிய கல்வித் தராதரம் இல்லாததால் இப்பயிற்சிக் கல்லூரியில் அம்மாணவர்கள் தொடர்ந்து படிக்கும்போது பெரும் கஷ்டத்துக்குள்ளாவர். வீண் பண நஷ்டமும் மன நஷ்டமுமே இறுதியில் இம்மாணவர்களுக்கு ஏற்படும். இந்த நஷ்டத்திலிருந்து இவர்களை நாம் காப்பாற்றவேண்டும்.

### தேவை

பலசரக்குச்சாய்ப்புச்சாமான்கள் விற்பனை செய்வதிலும் வான்மூலம் சாமான்கள் விநியோகம் செய்வதிலும் அனுபவமுள்ள ஒருவர் தேவை. விபரங்களுக்கு:-

விநோதன்ஸ் அன் கோ.
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.



### உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


### சிறுபான்மைத் தமிழர் அபிவிருத்தித் திட்டம்

உள்நாட்டிலும், அந்நியநாடுகளிலும் உத்தியோகம் பெற வசதியளிக்கும் அந்நிய நாடுகளில் மேல் படிப்புக்கு மாணவர்களை அனுப்பவும் பிரயத்தனம் எடுக்கப்படுகின்றது. ஆகவே வேலையற்றிருக்கும் பின்வரும் தராதரமுள்ளவர்கள் கீழ்க்காணும் விலாசத்துக்கு விண்ணப்பிக்கவும்.

1. எஸ். எஸ். ஸி.(ஆங்கிலம்) சித்தியடைந்தவர்கள். தாம் சித்திபெற்ற பாடங்களைக், குறிப்பிடவேண்டும். 2. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் (தமிழ், ஆங்கிலம்) 3. இன்டர் ஸயன்ஸ் அல்லது ஆர்ட்ஸ், ஜி. ஸி. ஈ (அட்வான்ஸ் லெவல்) சித்தியடைந்தவர்கள். 4. புட்டதாரிகள், சட்டக் கல்வியில் விரும்புகிறவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**குறிப்பு:** மலைநாட்டு மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

**அகில இலங்கை உரிமை குறைந்த தமிழர் அபிவிருத்தி இயக்கம்,**
128, 1 | 1, யோர்க் வீதி,
கொழும்பு.


### றேடியோ

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, **றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**



### தேவை

யாழ்ப்பாணத்தில் விற்பனைக்குள்ள பழைய ஓடுகள், தகரங்கள் தேவை. விற்பனைக்கு வைத்திருப்போர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு விலை விபரத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் x 20, ஈழநாடு
த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.






கண் சம்பந்தமான வியாதியினால் கஷ்டப்பட்ட பல்லாயிரக் கணக்கானவர்களின் துயரை நீக்கி அவர்களின் நல்-வாழ்த்துக்களைப் பெற்றுள்ளோம். ஒரு முறை கலந்தாலோசியுங்கள்!

**மு.க. ஜெகநாதன்**

யூனனி கண் வைத்தியநிபுணர்
பெரியகடை.....யாழ்ப்பாணம்


# உத்தியோக மொழியும்

## அரசாங்க ஊழியரும்

### நீதிமந்திரியை குமாஸ்தாக்கள் சங்க தூதுகோஷ்டி சந்தித்தது

கொழும்பு, வெள்ளி

உத்தியோக மொழியில் திடீரென்று தேர்ச்சியடைவதிலுள்ள கஷ்டங்களை அரசாங்கம் நன்கு உணர்ந்துள்ளது என்று நீதி மந்திரி சாம் பி. ஸி. பெர்ணண்டோ தம்மைச் சந்தித்த அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கத் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

ஆனால் உத்தியோக மொழியைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்றே மறுப்பவர்களிடம் தமக்கு அனுதாபம் கிடையாது என்று திரு. சாம் பி. ஸி. பெர்ணண்டோ கூறினார்.

தூதுகோஷ்டியினர் சமர்ப்பித்த கோரிக்கைகளை பிரதம மந்திரியிடமும் இதர மந்திரிகளிடமும் சமர்ப்பித்து அதன் முடிவுகளை விரைவில் சங்கத்துக்குத் தெரிவிப்பதாக நீதி மந்திரி உறுதியளித்தார்.

55 வயதுக்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் அரசாங்கத்துக்கும் பயனளிக்கக் கூடிய ஒரு நஷ்டஈட்டுத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலனை செய்யும் என்று நீதி மந்திரி உறுதி கூறினார்.

அரசாங்க குமாஸ்தாக்கள் சேவைச் சங்கத் தலைவர் திரு. டி. பி. திஸநாயக்கா, பொதுக் காரியதரிசி திரு. ஐ. ஜே. விக்கிரமா, உதவிப் பொதுக் காரியதரிசி திரு. என். விஜயசிங்கம், திருவாளர்கள் கே. எம், கருணாரத்தின, ஏ. டி. கவிசேன, எஸ். பாலசிங்கம் ஆகியோரைக்கொண்ட இத் தூதுகோஷ்டி கோரிக்கைகளடங்கிய ஒரு மகஜரை நீதி மந்திரியிடம் சமர்ப்பித்தது.

55 வயதையடைவதற்கு முன்னர் சேவையிலிருந்து ஓய்வு பெறச்சலுகையளிக்கப்பட்டவர்களுக்கு சேவை இழப்புக்காக நஷ்டஈட்டுடன் ஓய்வு பெற அனுமதியளிக்கப்படவேண்டுமென்றும் உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறுவதற்குக் கொடுக்கப்பட்ட மூன்று வருட அவகாசத்தை ஆறு வருட காலமாக நீடிக்கவேண்டுமென்றும் உத்தியோக மொழியில் தேர்ச்சி பெறவேண்டுமென்பதைக் கட்டாயமாக்கக்கூடாதென்றும் 1962-ம் ஆண்டு ஜனவரி மாதம் வரை ஓய்வு பெறுவதற்கு அனுமதியளிக்கப்படவேண்டுமென்றும் அந்த மகஜரில் கேட்கப்பட்டிருந்தது.

### பதில் அதிபர் நியமனம்

முள்ளியவளை, வெள்ளி

வித்தியானந்தக் கல்லூரி அதிபராகக் கடமையாற்றிய திரு. வை. எம். லாம்ப் காலி மல்கறசுல்கியா அரசினர் சிரேஷ்ட பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அவரது இடத்துக்கு, வவனியா அரசினர் சிரேஷ்ட பாடசாலையைச் சேர்ந்த திரு. வே. சோமசுந்தரம், பதில் அதிபராக நியமனம் பெற்றிருக்கிறார்.

### 4 மாதம் சிறை

பருத்தித்துறை, வெள்ளி

சின்னத்துரை கைம்பெண் வள்ளிப்பிள்ளை என்பவரை இரும்புக்கம்பியால் அடித்து காயப்படுத்தினர் எனக்குற்றம் சாட்டி சின்னத்தம்பி கிருஷ்ண பிள்ளை என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கில் பருதித்துறை நீதிபதி டபிள்யூ.டி. கே. லத்துவ ஹெட்டி எதிரிக்கு நான்கு மாதக் கடும்காவல் தண்டனை விதித்தார்.

### மன்னாரில் பால்வார விழா

மன்னார், வெள்ளி

அகில இலங்கைப் பால் வாரா விழா மன்னார் மாவட்ட பெண்கள் மன்றத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தாராக்குண்டு முஸ்லிம் பாடசாலையில் பாலைத் தயாரித்து அதைப் பக்குவப்படுத்திப் பாதுகாக்கும் முறையினை மாவட்ட சுகாதாரப் பரிசோதகர் திரு. வி. சிவஞானசுந்தரம் செய்து காண்பித்தார்.

### ரூ. 750 அபராதம்

#### சட்டவிரோதமாக சாராயம் தயாரித்தாராம்

மன்னார், வியாழன்

எஸ். வைத்தியலிங்கம் என்பவருக்குச் சொந்தமான குடியேற்றக்காணிக்குள் மன்னார் மாவட்ட கலால் பரிசோதகர் திரு.ஜே.கே. மில்ஸ்தலைமையில் சென்ற கோஷ்டியொன்று திடீர் சோதனை நடத்தி சட்டவிரோதமாகத் தயாரிக்கப்பட்ட 24 'டிரும்' சாராயத்தையும் சாராயம் தயாரிப்பதற்கு உதவியாயிருந்த உபகரணங்கயும் கைப்பற்றினர்.

இதுசம்பந்தமாக மன்னார் நீதவான் திரு. ரி. ஜே. இராஜரத்தினம் முன்னிலையில் வைத்தியலிங்கம் ஆஜர் செய்யப்பட்டார்

வைத்தியலிங்கத்துக்கு 750 ரூபாய் அபராதம் அல்லது 10 மாதக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

## "அடிக்காதே என்று சத்தமிட்டபடி ஓடினேன்"

### அராலி கொலைவழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

அராலி கொலை வழக்கில் யாழ்ப்பாணம் நீதவான் திரு அரசுவால்டன் மேலும் வாக்குமூலங்கள் பதிவுசெய்தார்.

அராலியைச் சேர்ந்த ராமன் முத்தன் என்பவரை சென்ற மாதம் முதலாந்திகதி அடித்துக் கொலை செய்ததாக கணபதி நாகமணி, கணபதி கந்தையா, ஆறுமுகம் மார்க்கண்டு ஆகியோர் மீது குற்றஞ்சாட்டி சங்கானைப் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. கே. குமார் இவ்வழக்கைத் தொடர்ந்துள்ளார்.

திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடன் திரு. ரி. கணேசலிங்கம் எதிரிகளின் சார்பில் ஆஜரானர்.

வட்டுக்கோட்டை த்வைதிய அதிகாரி டாக்டர் எம். முருகேசபிள்ளை சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:

காலஞ்சென்ற ராமன் முத்தனின் பிரேதத்தை நான் பரிசோதனை செய்தேன். உடலின் வெளிப்புறத்தில் எட்டுக் காயங்களிருந்ததைக் கண்டேன். இவைகளில் இரண்டு காயங்கள் மிகவும் ஆபத்தான காயங்களாக இருந்தன. நான் பரிசோதனை செய்வதற்கு சுமார் 16 அல்லது 24 மணி நேரத்துக்குமுன் அவர் இறந்திருக்கக்கூடும்.

டாக்டர் முருகேசபிள்ளையை எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. ரி. கணேசலிங்கம் நீண்டநேரம் குறுக்கு விசாரணை செய்தார்.

காலஞ்சென்ற ராமன் முத்தனின் உறவினரான 42 வயது கந்தன் சரவணை சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:—

சென்றமாதம் முதலாந்திகதி மாலை 7 அல்லது 7-30 மணியிருக்கும். நான் வீட்டிலிருந்தேன். அப்பொழுது சுமார் 25 யார் தூரத்தில் அடிவிழும் சத்தம் கேட்டது. உடனே அந்த இடத்துக்கு நான் ஓடினேன். "அடிக்காதே, அடிக்றுகாதே" என் சத்தம் போட்டபடி நான் ஓடினேன். ஒரு மனிதன் கீழே விழுந்துகிடந்ததைப் பார்த்தேன். பின்னர் அது ராமன் முத்தன் என்று கண்டேன்.

மூன்று எதிரிகளும் அவரை அடித்தார்கள். முதல் எதிரி கையில் ஒரு தடி வைத்திருந்தார். மற்ற இரண்டு எதிரிகளும் கையில் பொல்லு வைத்திருந்தனர். நான் அந்த இடத்துக்குப் போனதும் இரண்டாம், மூன்றும் எதிரிகள் அடிப்பதை நிறுத்திக்கொண்டனர். ஆனல் முதல் எதிரி பிறகும் இரண்டு தடவை அடித்தார்.

நான் சத்தமிட்டேன். எதிரிகள் மூவரும் ஓடிவிட்டனர்.

நான் கிராமச்சங்கத் தலைவரிடம் ஓடிச்சென்று நடந்தவைகளைக் கூறினேன். பொலிசுக்குப் போகவேண்டுமென்றும் தெரிவித்தேன்.

ஊரடங்குச்சட்டம் இருப்பதால் என்னை வெளியே போகவேண்டாமென்று கிராமச்சங்கத் தலைவர் சொன்னர். நான் வீட்டுக்கு வந்தேன். முத்தன் சுமார் இரண்டுமணி நேரத்தின்பின் மரணமானர்.

அடுத்தநாள் காலை இச்சம்பவத்தை சங்கானைப் பொலிசுக்குத் தெரிவித்தேன்.

மேல் விசாரணை இம்மாதம் 21ந் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

### கவர்னர் ஜெனரலுக்கு விண்ணப்பம்

#### 80 எம். பிக்கள் கையொப்பம்

கொழும்பு, வெள்ளி

வெலிமடை எம். பி. திரு கே. எம்.பி. ராஜரத்தினவுக்கு மன்னிப்பு வழங்கக்கோரி கவர்னர் ஜெனரலுக்கு ஒரு விண்ணப்பம் அனுப்புவதில் தம்பதெனியா எம். பி. திரு. ஆர் ஜி. சேயநாயக்கா ஈடுபட்டுள்ளார். இந்த விண்ணப்பத்தில் எண்பதுக்கு மேற்பட்ட எம் பிக்களிடம் திரு. ஆர். ஜி சேனநாயக்கா நேற்று கையொப்பம் வாங்கினர்.

### வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டம்

ஜம்மு, ஜூன் 9

காஷ்மீரில் வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டமொன்று உருவாக்கப்படவுள்ளது. இத்திட்டத்துக்கு சுமார் இரண்டரைக்கோடி ரூபாய் செலவிடப்படுமாம்.

இத்திட்டத்தின்படி மழைக் காலத்தில் ஜீலம் நதி திருப்பிவிடப்படுமென்றும் மேலும் அதிக மின்சாசரம் உற்பத்தி செய்யமுடியுமென்றும் அறிவிக்கப்பட்டது.


## மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM — TRADE MARK 1956

**மொணரு அன் ரோஸ் பப்படங்கள்**
மூவர்ண கலர் லேபிளுடன்
மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM. REGD. TRADE MARK No 18255. A.M. BUHARI. 255, 5TH CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**
99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# ஜெனிவா மகாநாடு — வெற்றியளிக்கும் என்கிருர்

# குரோமிக்கோ

## நிலைமையைச் சமாளிக்க மேனன் தீவிர முயற்சி

ஜெனிவா, ஜூன் 9

லாவோஸ் சம்பந்தமான 14 நாடுகளைக்கொண்ட சர்வதேசக் கருஷனின் மகாநாடு ஒத்திவைக்கப்பட்டிருக்கும் இச்சமயத்தில் மகாநாடு முறிந்து போகாமல் தடுப்பதற்கான தீவிர முயக்சியில் பல பிரதிநிதிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

லாவோஸில் ஜாஸ் பகுதியில் முக்கிய இடமான படோங் என்ற இடத்தை லாவோஸின் இட்துசாரிப் படைகள், சண்டை நிறுத்த உடன்படிக்கையை மீறிக் கைப்பற்றிக் கொண்டதைத் தொடர்ந்து ஜெனிவா மகாநாட்டுக் கூட்டம் ரத்துச்செய்யப்பட்டுள்ளது.

படோங் என்ற இடத்தில் அமெரிக்கா ஆட்களையும் ஆயுதங்களையும் கொண்டுவந்து குவித்ததாகவும் கொள்ளைக் கூட்டத்தினரை வெளியேற்றவே இடதுசாரிப் படைகள் அங்குசென்றதாகவும்ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள பதட்லாவோ பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

ஜெனிவா மகாநாடு சம்பந்தமாக தங்கள் அரசாங்கங்களிடமிருந்து புதிய உத்தரவுகளை எதிர்பார்த்து மேற்குநாடுகளின் பிரதிநிதிகள் காத்திருக்கின்றனர்.

### கென்னடி அறிவிப்பு

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொண்டுள்ள அமெரிக்கப் பிரதிநிதிகள் ஜெனிவாவில் தங்கியிருக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக அமெரிக்க ஜனதிபதி கென்னடி அறிவித்தார்.

வியன்ன பேச்சுவார்த்தைகளில் ஒப்புக்கொள்ளப்பட்டது போல் லாவோஸை ஒரு சுதந்திர நடுநிலைமை நாடாக்க அமெரிக்கா தொடர்ந்து முயற்சிசெய்துவரும் என்று திரு. கென்னடி தெரிவித்தார்.

### குரோமிக்கோ வருகை

லாலோஸுக்கான சர்வதேச கமிஷனின் கூட்டுத் தலைவர்களில் ஒருவரான சோவியத் வெளிவிவகார மந்திரி திரு. குரோமிககோ இன்று ஜெனிவா வந்து சேர்ந்தார்.

வியன்னவில் சோவியத் பிரதமர் குருஷேவும் அமெரிக்க ஜனதிபதி கென்னடியும் சந்தித்துப்பேசிய சமயத்தில் அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன் றஸ்க்குடன் பேச்சுவார்த்தை நடத்திய திரு. குரோமிக்கோ பின்னர் மாஸ்கோசென்று இப்பொழுது ஜெனிவா திரும்புயுள்ளார்.

திரு. குரோமிக்கோ ஜெனிவா வரும் வழியில் பாரிஸுக்குச் சென்ருர். பாரிஸில் நிருபர்களின் கேள்வியொன்றுக்கு திரு. குரோமிக்கோ பதிலளிக்கையில் ஜெனிவா மகாநாடு வெற்றியளிக்கும் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

ஜெனிவா மகாநாட்டில் கலந்துகொள்ளும் நாடுகள் ஒரு உடன்பாட்டுக்கு வரவிரும்பினல் லாவோஸ் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காண்பது சாத்தியமேயென்று திரு. குரோமிக்கோ ஜெனிவா திரும்பியதும் கூறினர்.

### மேனன் தீவிர முயற்சி

ஜெனிவா மகாநாட்டில் இப்பொழுது தோன்றியுள்ள நிலைமையைச் சமாளிக்க இந்திய பாதுகாப்பு மந்திரியும் ஜெனிவா மகாநாட்டில் இந்தியாவின் தலைமைப் பிரதிநிதியுமான திரு. வி. கே. கிருஷ்ண மேனன் தீவிர முயற்சி செய்து வருகிருர்.

ஜெனிவா மகாநாட்டின் கூட்டுத் தலைவர்களில் ஒருவரான பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. மால்கம்மக்டனல்டை திரு. மேனன் நேற்றுத் தனியாகச் சந்தித்துப் பேசினர்.

போலந்து, கனடா ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளையும் திரு. மேனன் சந்தித்துப் பேசினர்.

லாவோஸில் ஏற்பட்டுள்ள புதிய சண்டை பற்றிய முழுவிபரமான அறிக்கையை லாவோஸிலுள்ள சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனிடமிருந்து எதிர்பார்த்துக்கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் பிரதிநிதி திரு. மால்கம்மக்டனல்ட் தெரிவித்தார்.

---

## எண்ணெய்த் தொழில்

### சோவியத்யூனியன் செல்லும் கோஷ்டி

புதுடில்லி, ஜூன் 9

இந்தியாவிலுள்ள எண்ணெய்த் தொழிலில் ஈடுபட்டுள்ள 7 பிரதிநிதிகள் சோவியத் யூனியனிலும் செக்கோஸ்லவேக்கியாவிலும் சுற்றுப்பிரயாணம் செய்வதற்காக இம்மாதம் 27 ந் திகதி பிரயாணமாகிருர்கள்.

சோவியத் யூனியனிலும் செக்கோஸ்லவேக்கியாவிலும் எண்ணெய்த் தொழில் பற்றி இவர்கள் ஆராய்வர்.

---

## சினிமாப் படத்தின் இலட்சியம் என்ன?

### ஸ்ரீ சுப்பிரமணியம் விளக்கம்

சென்னை, ஜூன் 8

"சினிமாப் படங்கள் வெறும் பொழுதுபோக்கிற்காக மட்டுமல்லாமல் மக்களை உயர்த்துவதாகவும் இருக்கவேண்டும். அவைகள் பிளவுச் சக்திகளை முறியடித்து நாட்டை ஐக்கியப்படுத்தும் கருவிகளாகத் திகழவேண்டும்" என்று நிதிமந்திரி ஸ்ரீ சுப்ரமணியம் இங்கு கூறினர்.

ஸ்ரீ சுப்ரமணியம் ரஷ்யாவிலும், அமெரிக்காவிலுலும்சுற்றுப்பிரயாணம் செய்யப் போவதையொட்டி தென்னிந்திய பிலிம் வர்த்தகசபையினர் அவருக்கு விருந்துபசாரம் அளித்தனர். அப்பொழுது பேசுகையிலேயே நிதி மந்திரி மேற்கண்டவாறு கூறினர்.

"தயாரிக்கப்படும் சினிமாப் படங்கள் நான் முதலில் கூறிய விளக்கப்படி இருந்தால் தமாஷாவரியை நீக்க நான் தயங்கமாட்டேன்" என்று கூறினர் அவர்.

அயல் நாடுகள் அரசியல் பொருளாதாரத் துறையில் எந்த அளவிற்கு முன்னேறியுள்ளன என்பதை கண்டறிவதேதனது சுற்றுப் பிரயாணத்தின்நோக்கம் என்று மந்திரி குறிப்பிட்டார்.

---

## கேரளத்தில் ஒரு நாள் ஹர்த்தால்

திருவனந்தபுரம், ஜூன் 9

கேரள அரசாங்கத்தின் விற்பனை வரியை எதிர்த்து கேரளத்திலுள்ள வர்த்தகர்கள் ஒரு நாள் ஹர்த்தால் அனுஷ்டித்தனர்.

## தேவிபுரத்தில் மேலும் 300 குடும்பங்கள்

### வடபகுதியிலிருந்து இம்மாதம் குடியேறும்

யாழ்ப்பாணம், சனி

புதுக்குடியிருப்பு தேவிபுரம் குடியேற்றத் திட்டத்தில் வடபகுதியிலிருந்து 300 குடும்பங்கள் இம்மாதம் 17-ம் திகதி குடியேறவிருக்கின்றனர்.

தென்னைப் பயிர்ச் செய்கைக்கான இக்குடியேற்றத் திட்டத்தில் மற்றைய் குடியேற்றத் திட்டங்களுக்கு வழங்கப்படும் உதவிகளிலும் அதிகமான உதவிகள் அளிக்கப்படவிருக்கிறது.

காடு வெட்டி அழிக்க ஒரு ஏக்கருக்கு நூறு ரூபாய் வீதம் வழங்கப்பட விருப்பதோடு வீடும் கிணறும் வெட்டிக் கட்டிக் கொடிக்க ஏற்பாடாகியுள்ளதாகத் தெரிகிறது.

ஏற்கனவே இரண்டு தடவைகள் குடியேற்றம் நடைபெற்றிருக்கும் வவனிக்குளம் குடியேற்றத் திட்டத்தில் மேலும் 300 குடும்பங்கள் அதிவிரைவில் வடபகுதியிலிருந்து குடியேற்றப்படவிருப்பதாகத் தெரிகிறது.

அக்கராயன்குளம் குடியேற்றத் திட்டத்திலும் வடபகுதியிலிருந்து 300 குடும்பங்கள் ஜூலை மாதத்தில் குடியேறவிருக்கிறது. இத்திட்டத்தில் குடியேற்றுவதற்கான காணிக் கச்சேரி சென்ற வருட முற்பகுதியில் நடைபெற்றது.

## தென்னுபிரிக்க பிரதமர் மறுப்பு

கேப்டவுன், ஜூன் 9

தென்னுபிரிக்காவிலுள்ள எல்லா இன மக்களின் பிரதிநிதிகளையும்கொண்ட ஒரு மகாநாடு கூட்டவேண்டுமென்ற யோசனையைதென்னுபிரிக்கபிரதமர் டாக்டர் வெர்வூட் நிராகரித்துவிட்டார்.

இத்தகைய மகாநாட்டைக் கூட்டுவதால் பூசல்களும் வேற்றுமையும் அதிகரிக்குமென்று அவர் தெரிவித்தார்.

---

## சக்ளா திரும்புகிருர்

நியுயோர்க், ஜூன் 9

அமெரிக்காவில் பாரதத்தின் தூதராகப் பணியாற்றிய திரு. எம். ஸி. சக்ளா, அவரது பதவிக்காலம் முடிந்து இன்று நியுயார்க்கிலிருந்து இந்தியாவுக்குப் பிரயாணமானர்.

---

## கேரள சட்டசபை சபாநாயகர்

### முஸ்லிம் லீக் தலைவர் தெரிவு

திருவனந்தபுரம், ஜூன் 9

கேரள சட்டசபை சபாநாயகராக, முஸ்லிம் லீக்கின் சட்டசபைக் குழுத்தலைவர் ஜனப் கோயா தெரிவுசெய்யப்பெற்ருர்.

கேரள ராஜ்ய கலப்பு அரசாங்கக் கட்சிகளான காங்கிரஸ், பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, முஸ்லிம் லீக் ஆகியவைகள் ஜனப் கோயாவை சபாநாயகர் பதவிக்கு அபேட்சகராக நிறுத்தியிருந்தனர்.

கம்யூனிஸ்ட் கட்சி நிறுத்திய ஆயிஷாவைவிட ஜனப் கோயா 56 அதிகப்படியான வாக்குகள் பெற்ருர்.

ஜனப் கோயா சாநாயகர் தேர்தலில் போட்டியிடு முன் லீக்கிலிருந்து ராஜினமாச் செய்தார்.

---

பாரிஸ், ஜூன் 9

பிரஞ்சு ஜனதிபதி ஜெனரல் டிகால், பிரஞ்சு ஆயுதப்படைகள் சம்பந்தமாக மேலும் பல புதிய அதிகாரங்களை தமது பொறுப்பில் எடுத்துக்கொண்டார்.

# பலாத்காரத்தை தூண்டுபவர் மீது கடும் நடவடிக்கை

## பஞ்சாப் முதன்மந்திரி எச்சரிக்கை

கல்கத்தா, ஜூன் 9

"அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் எந்த நடவடிக்கையையும் அரசாங்கம் முறியடிக்கத் தயாராக இருக்கிறது" என்று பஞ்சாப் ராஜ்ய முதன்மந்திரி திரு. பிரதாப்சிங் கைரோன் மீண்டும் எச்சரித்துள்ளார்.

பஞ்சாபி மொழி பேசும் தனி ராஜ்யம் அமைக்கக் கோரி அகாலிதள இயக்கத் தலைவர் மாஸ்டர் தாரசிங் சாகும் வரை உண்ணவிரதமிருக்கப் போவதாக அறிவித்துள்ளதைத் தொடர்ந்து பஞ்சாபில் தோன்றிவரும் நிலைமையைக் குறிப்பிட்டே முதன் மந்திரி கைரோன் மேற்கண்டவாறு கூறினர்.

அகாலித்தள இயக்கத் தலைவர்கள் பலர் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய விதத்தில் அகாலித்தள இயக்கத்தினர் பேசிவருவதாக முதன்மந்திரி கைரோன் தெரிவித்தார்.

பலாத்காரத்தைத் தூண்டக்கூடிய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள்மீது வழக்குத் தொடரவும் அரசாங்கம் தயங்காது என்று முதன்மந்திரி தெரிவித்தார்.

குலு பள்ளத்தாக்கில் ஓய்வு பெறுவதற்குச் சென்ற பிரதமர் நேரு சண்டிகார் நகரில் நிருபர்கள் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையில் மாஸ்டர் தாராசிங்குக்கு தாம் அழைப்பனுப்பவில்லையென்று தெரிவித்தார்.

## நிலக்கரிச்சுரங்க தீவிபத்து

பாட்ன, ஜூன் 9

பீகார் ராஜ்யத்தில் நிலக்கரிச் சுரங்கப்பகுதியில் ஒரு சுரங்கத்தில் தீப்பிடித்து எரிவது சம்பந்தமாக அத்தீயை அணைப்பது பற்றியும் இதர நடவடிக்கைகள் பற்றியும் உடனடியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு சுரங்க புவியியல் டைரக்டரைக் கேட்டிருப்பதாக பீகார் ராஜ்ய முதன் மந்திரி திரு. விநோதானந்தஜா தெரிவித்தார்.

அறிக்கை கிடைத்ததும் இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துடன் கலந்தாலோசனை செய்யப்போவதாக திருஜா கூறினர்.

---

## ஜப்பான் பிரதமரின் அமெரிக்க விஜயம்

### எதிர்த்தும் ஆதரித்தும் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஜூன் 9

ஜப்பான் பிரதமர் திரு. இக்கேடா அமெரிக்காவுக்கு விஜயம் செய்வதை ஆதரித்து சுமார் 1500 மக்கள் நேற்று டோக்கியோவில் மகிழ்ச்சி ஆர்ப்பாட்டம் நடத்தினர். திரு இக்கேடா அமெரிக்கா செல்வதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக ஜப்பானின் முக்கிய எதிர்க்கட்சியான சோஷலிஸ்ட் கட்சி அறிவித்ததைத் தொடர்ந்து இந்த ஆதரவு ஊர்வலம் நடைபெற்றது.

## கராச்சியில் பலத்த காற்று

டாக்கா, ஜூன் 9

கராச்சியிலும், டாக்காவிலும் தென்மேற்குப் பருவக்காற்று மணிக்கு 40, 45 மைல் வேகத்தில் வீசுவதாக அறிவிக்கப்படுகிறது.

---

## நீதிபதிகள் ராஜினமா

சியோல், ஜூன் 9

தென்கொரியாவில் பிரதம நீதியரசரும் இதர நீதிபதிகளும் நேற்று ராஜினமாச் செய்தனர்.


'சிரநேத்திரஞ்சனத் தைலம்'

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும்

வேண்டுமா ?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

மு. க. ஜெகநாதன்

யூனனி கண் நிபுணர்

பெரியகடை, யாழ்ப்பாணம்

## மணிவாக்கு

ஊக்கம், கற்பனை, அறிவு, அன்பு குணங்களும் ஆகிய இந்நான்கு பயனுள்ள வாழ்க்கைக்கு வேண்டியன. மக்கள் தம் உள்ளத்தில் இவற்றைப் பாதுகாத்து வந்தால் தனி வாழ்க்கையும சமூக வாழ்க்கையும் உன்னத நிலை அடையும்.

— ராஜாஜி


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 28உ (10-6-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## உணவுப் பொருளுக்கு உதவிப் பணம்

உணவு, வர்த்தக அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியான திரு. ஆழ்வாப்பிள்ளை, ஒரு முக்கிய எச்சரிக்கை செய்துள்ளார். உணவுப் பொருள்களுக்கான உதவிப் பணம் வர வர அதிகரித்துக்கொண்டு போவதாயும், அடுத்த நிதி வருடத்தில் இத்தொகை 36 கோடி 9 லட்சத்துக்கு உயருமென்றும், இதை ஓரளவுக்கு ஸ்திரப்படுத்தி நிறுத்தாவிடில், நாட்டின் பணநிலைக்கே ஆபத்தேற்படுமென்றும் உணவு அமைச்சருக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் அறிவுறுத்தியுள்ளதாகத் தெரிகிறது. மந்திரி சபைக்கும் இது தெரியாதிருக்க முடியாது. ஆனாலும் அடுத்த தேர்தல் முதலிய அரசியல் காரணமாக, தாங்கமுடியாத இப்பளுவை அரசாங்கம் அதிகரித்துக் கொண்டே போகின்றது.

அடுத்த வருடத்தில் ரேஷன் அரிசிக்காக 35 கோடி 81 லட்சம் ரூபாயும், வெங்காயத்துக்கு 15 லட்சமும், மாசிக்கு 10 லட்சமும், மைசூர் பருப்புக்கு 3 லட்சமும் அரசாங்க உதவிப்பணம் அளிக்கவேண்டியிருக்குமென்கிறார், நிரந்தரக் காரியதரிசி. இந்தத் தொகை நடப்பு வருடம் அளித்த உதவிப் பணத்தைவிட 29 லட்ச ரூபாய் அதிகமாகும். இவ்வளவு உதவிப் பணத்தைக் கொடுத்தும் கூட வாழ்க்கைச் செலவுகள் அதிகரித்துக் கொண்டே போகின்றனவேயன்றிக் குறையக் காணேம். கொழும்பிலுள்ளதைவிட வடக்கு, கிழக்கு மாகாணத்தில் விலைவாசிகள் மிக அதிகம். காய்கறி, மீன் இவற்றின் விலை மிக உயர்ந்து ஏழை மக்கள் வாங்கிச் சாப்பிட முடியாதபடியுள்ளது. மட்டக்களப்பிலே நாளொன்றுக்கு 40 ஆயிரம் ராத்தல் மீன் பிடிக்கப்பட்டும் அங்கு மக்களுக்கு மீன் பஞ்சம் ஏற்பட்டிருக்கிறதாம்!

அரசாங்கம் ஒரு பக்கம் உணவுக்காகப் பொதுப் பணத்திலிருந்து கோடிக் கணக்கில் செலவிடுகையில், வேறு சிலர், இப்பணத்தை மறைமுகமாகப் பறித்து மக்களுக்குச் சங்கடமேற்படுத்துகின்றார்கள். ஆகவே அரசாங்கம் இதைப் பற்றிப் புனராலோசனைசெய்து தக்க நடவடிக்கை எடுக்காவிடில், அரசாங்கத்தின் பணநிலைமை மோசமாவதுடன், பொது மக்களின் துன்பமும் வரவர அதிகரிப்பதாகும்.

## அதிகரிக்கும் தற்கொலைகள்

சாவகச்சேரியில் 18 வயதுள்ள ஒரு இளைஞர் கிருமிநாசினியை உட்கொண்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். ஆறு மாதங்களுக்கு முன் அவருடைய தகப்பனர் இறந்தது முதல் மனமுடைந்து தானும் தகப்பனரிடம் செல்லப் போவதாகக் கூறி, முடிவில் இவ்விதம் செய்திருக்கிறார்.

காங்கேசன்துறையிலே 20 வயதுள்ள மற்றொரு வாலிபர் தன் பெற்றோர்களும் சகோதரரும் திட்டியது தாங்காமல் தூக்கிட்டுக் கொண்டு மாண்டார். ஒரே நாளில் இவ்விரு தற்கொலைகளும் வட மாகாணத்தில் நடந்துள்ளன. இவ்வித பரிதாப சம்பவங்கள் அதிகமேற்பட்டு, வளரும் பயிர்களான வாலிபர்கள் தற்கொலை செய்து கொள்வது கவலைக்கிடமான சமூகப் பிரச்சினையாகும்.

வாழ்க்கைப் போட்டிகளும், வேலையில்லாக் கஷ்டங்களும் அதிகரித்துள்ள இக்காலத்தில், இளைஞர்கள், திகைத்து, மனமுடைந்து தற்கொலை செய்து கொள்வதைத் தவிர தங்களுக்கு வேறு வழியில்லை என்றுகருதுகின்றனர். "அன்பு மிகுந்த தெய்வம் உண்டு; துன்பம் அத்தனையும் போக்கிவிடும்" என்று அவர்களுக்கு ஆறுதலும் நம்பிக்கையும் அளிக்கக் கூடிய பெற்றோர்களும் ஆசிரியர்களும் இருந்திருப்பின் இப்படி அவர்கள் தங்கள் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொண்டிருக்க மாட்டார்கள்.

இதில் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் கடமை உண்டு. பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு வெறும் பாடங்களைப் படிப்பிப்பதுடன் நில்லாது, வாழ்க்கைப் போராட்டத்தை எதிர் நின்று தைரியமாக நடத்துவதற்கான பயிற்சி அளிக்க வேண்டும். பெற்றோர்களும் வீட்டிலே தெய்வ நம்பிக்கையை தங்கள் மக்களுக்கு ஊட்டி, அவர்களைத் திடமனதுள்ள வீரர்களாக்க வேண்டும். அவ்வித பயிற்சி பெற்ற வீரர்கள், கோழைத்தனமாக, வாழ்க்கைப் போராட்டத்தை நடத்த முடியாமல், தற்கொலை செய்து கொள்வதை நினைக்கவும்மாட்டார்கள்.

# மக்கள் சமுதாயத்தில் இலக்கியத்தின் பங்கு

## நாடு ஒளிபெற நல்லதைச்சொல்வோம்

—அகிலன்—

உலகத்திலேயே வரலாறு தோன்றிய காலத்திலிருந்தே சிந்தனைக் குழுக்கள் அங்கங்கே பல இடங்களில் நடந்திருக்கின்றன. கருத்து விதைகளைப் பரவலாகப் பெரும் கூட்டத்தில் போடுவதைவிட எண்ணிக்கையிலே குறைந்த, ஆனல் எண்ணத்தை வளர்க்க வேண்டும் என்ற ஆர்வம் உள்ளவர்கள் மத்தியிலே பரப்புவது, சமுதாயத்தை மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்தது. காந்தியடிகளின் கொள்கைளைப் பரப்புவதற்கு கூட்டுச் சிந்தனை செய்வது நம்முடைய நாட்டின் சிந்தனையை, உழைப்பு சக்தியை மாற்றி அமைத்து, நாடு ஒளி பெற வழி செய்கிறது.

### இலக்கியம் என்ருல்....

இலக்கியம் என்பதுஎங்கோ இருந்து வருவதல்ல. மக்களின் வாழ்க்கையிலிருந்தே மக்களின் வாழ்க்கையை அழகுபடுத்துவதற்கு, மேம்படுத்துவதற்கு, ஒழுங்குபடுத்துவதற்குத்தோன்றிய ஒன்று. சமுதாயத்தைப் பற்றிச் சிந்திக்கத் தெரிந்தவர்கள் தங்களுடைய எண்ணங்களை எழுத்தில் வடிப்பது இலக்கியம்; அது ஒரு நிலைக் கண்ணடி; ஆனல் நம்முடைய புறத்தோற்றத்தைமட்டுமின்றி அகத்தோற்றத்தையும் நமக்குக் காட்டுகிறது. நம்மிடமுள்ள நல்லவற்றைக் கண்டு பெருமைப்படவும், குறைகளைக் கண்டு திருத்திக்கொள்ளவும் உதவுகிறது. பல மலர்களில் இருக்கும் தேனை ஒரு வண்டு சேகரிப்பதைப் போல நீக்க வேண்டியவற்றை நீக்கி, கொள்ள வேண்டியவைகளைக்கொண்டு வாழ்க்கை நிகழ்ச்சிகளை அழகுபடுத்திக் காட்டுகிறன் சிந்தனையாளன்; அதுதான் இலக்கியம்.

மக்களிடத்தில் ஆழ்ந்த பற்றும் அன்பும் இல்லாவிட்டால் எந்தக் கதையும் காவியமும் தோன்றியிருக்காது. மக்களோடு ஒன்றி வாழ்வதோடு கூட கற்பனை மனம், அழகு மனம், சுவை கொடுக்கும் மனம், இவையும் சேர்ந்திருந்தால் அது மக்களின் முன் இலக்கியத்தைக்காட்டமுடியும். தவறு செய்யக் கூடாதுஎன்று ஒரு வார்த்தையில் சொல்லிவிடலாம்; திருடாதே என்று ஒரே வார்த்தையில் கூறிவிடலாம். ஆனல் அப்படிக் கூறுவதில் மக்கள் மனம் செலுத்தித் திருந்திவிடமாட்டார்கள். திருட்டு என்பது என்ன, அதைச் செய்தவன் என்னென்ன கஷ்டங்களுக்கு ஆளாகிறன், அவன் வாழ்க்கை எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பன போன்ற வாழ்க்கை நிகழ்ச்சிகளை அதனேடு தொடர்புபடுத்தி கதையாக, காவியமாகச் சொல்லும்போது, மக்கள் மனத்தை அது ஈர்க்கிறது; திருத்துகிறது. அதைச் செய்பவன் இலக்கியவாதி. இராமாயணம், பாரதம் என்ற இதிகாசங்கள் மக்களின் வாழ்க்கையை மிகவும் வளம்படுத்தியிருக்கின்றன என்பது மிகையல்ல. இமயம் முதல் கன்னியாகுமரி வரை பெரும்பாலோருடைய வாழ்க்கையில் அவர்களை அறிந்தோ அறியாமலோ அவை வளர்ந்திருக்கின்றன.

### வள்ளுவரும் கம்பரும்

தமிழக இலக்கியங்களை எடுத்துக்கொள்வோம். வள்ளுவப் பெருந்தகையைப் பற்றி எத்தனையோ எழுதிவிட்டார்கள். தமிழன்கள் இருக்கும் வரை அது வாழும். இளங்கோ ஒரு இலக்கியவாதி. சேர, சோழ, பாண்டிய நாடுகளின் கலை வளத்தை, வாழ்க்கை நிலையை, ஒரு சாதாரண மனிதனை வைத்துத் தமிழகத்திற்கு ஒரு அருமையான இலக்கியத்தைக் கொடுத்தவர் ஆவர். கம்பன் ஒரு கற்பனைக் களஞ்சியம். வால்மீகியின் கதையை வைத்துக் சொண்டு, தமிழ்ப்பண்பாட்டை ஒரு காவியமாக ஆக்கியிருக்கிறன், கம்பன். போக்குவரத்து, அச்சு முதலிய வசதிகள் இல்லாத அந்தக் காலத்தில் இதுபோன்ற காவியங்கள் மக்கள் மனதில் பதிந்திருக்கின்றன என்ருல், அது எப்படி? ஒரு சிலர் படித்து பலருக்கு விளக்கி இப்படியாகப் பரவியிருக்கின்றன; மன்னர்களின் ஆதரவால் பரவின;

(8ம் பக்கம் பார்க்க)

இரத்தினக் கம்பளம்

# துணைவேந்தர் கவலை

பதுமன்

பல்கலைக்கழகங்களைப் பார்த்து "இங்கு பைத்தியக்காரர்கள் இருக்கின்ருர்கள்" என்று ஒருவர் சொன்னல், அவருக்கு 'மேல்வீடு' கொஞ்சம் பிசகோ என்று கேட்பார்கள்!

ஆனல், பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஒருவரே அவ்வாறு கூறுவதென்ருல் அதைப் பற்றி அனைவரும் ஆழ்ந்து சிந்தித்தேயாகவேண்டும்.

இப்போதெல்லாம் பல்கலைக் கழகங்கள் பைத்தியக்கார மாணவர்களின் இருப்பிடங்களாக மாறிக்கொண்டு வருகின்றன என வித்தியாலங்காரப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் வண. கிரிவத்துடுவா பிராக்னசாரா கூறியிருக்கின்ருர். இதனை எவரும் இலேசாகத் தட்டிக் கழித்துவிட முடியாது.

பொறுப்புவாய்ந்த அந்த அறிஞர் இப்படி எதற்காகக் கூற வேண்டும். திறமைவாய்ந்த மாணவர்கள் பயிற்சி பெறும் ஒரு கலைக்கோயிலுக்கு இந்த இழுக்கு ஏன்? இப்படி எண்ணும்போது, அந்தத் துணைவேந்தருக்கு இக்கால மாணவர் பலரின் போக்குத்தான் மிகுந்த விசனத்தை உண்டாக்கி, அவர்களைப் பைத்தியகாரர்கள் என்று சொல்லுமளவுக்கு அவரைத் தூண்டியிருக்கின்றது போலும்

### கட்டுப்பாடு இல்லை

இலங்கையிலுள்ள பல்கலைக் கழகங்களில் இப்போது சுமுகமான சூழ்நிலை உண்டாவதில்லையெனவும் மாணவர்களிடையே கட்டுப்பாடும் ஒழுக்கமும் அருகிவருகின்றதெனவும் துணைவேந்தர் கருதுகின்ருர். இந்த நிலைமை நீடித்துக்கொண்டுவருமாயின், பல்கலைக்கழகங்கள் பைத்தியக்காரர்களின் விடுதியாக மாறிவிடும் என அவர் கவலைப்படுவது இயல்புதான்.

இதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தபோது, துணைவேந்தரே மாணவர்களின் பித்தம் தெளிவதற்கான மருந்தையும் கூறுகின்ருர். மாணவர்களுக்கு அஹிம்சையைப்பற்றிப் போதிக்கவேண்டுமாம். அன்பு, இரக்கம்,' அனுதாபம் அஹிம்சைக்கு அடிப்படையாகவுள்ளன. அவற்றை எல்லாம் பல்கலைக்கழகங்கள் போதிப்பதாயின் பல்கலைக்கழகங்கள் ஆச்சிரமங்களாக மலர்ந்துவிடுமென்பது துணைவேந்தர் எண்ணம்போலும். பல்கலைக் கழகங்கள் பைத்தியக்காரர்களின் இருப்பிடங்களாக மாறுவதிலும் பார்க்க அவை அன்பு வளர்க்கும் ஆச்சிரமங்களாக மாறுவது நல்லதுதானே!

### காலம் மாறும்

பரீட்சையில் தோல்வியடைபவர்களும், வேலையிழந்து தவிப்பவர்களும் சில வேளைகளில் அதிர்ஷ்டசாலிகளாகிவிடுகின்றனர். சில வாரங்களுக்கு முன்னர் பரீட்சை ஒன்றில் தவறிய மாணவனை ஆஸ்பத்திரி 'சுவீப்' கைதூக்கிவிட்டது. அவரின் எதிர்காலமே பூத்துக் குலுங்குவதாயிற்று.

சமீபத்தில் வேலையிழந்த முஸ்லிம் இளைஞர் ஒருவருக்கு ஆஸ்பத்திரி சுவீப் மூலம் 67 ஆயிரம் ரூபாய்க்குமேல் கிடைத்திருக்கின்றது.

இவர் தனது பெற்ருேருடன் இனி சௌகரியமாக வாழத் திட்டமிட்டிருக்கின்ருர். ஏதோ பொல்லாத காலம் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கு மறுகணமே நல்லகாலம் சொல்லாமற் கொள்ளாமல் வந்துவிடுகின்றது. இவற்றை எல்லாம் பார்க்கும்போது இந்த உலகத்தில் என்ருே ஒருநாள் எல்லோருக்கும் நல்லகாலம் பிறக்கும் என்ற நம்பிக்கை உண்டாகாமற் போகாது!

## ஐயாறன் எழுதுவது

இன்று புத்தர் பெருமானின் புனித தந்தம் சீனத்திலிருந்து விமான மார்க்கமாக கொழும்புக்கு வருகிறது.

இதை வரவேற்க செய்துள்ள பிரமாதமான ஏற்பாடுகளைப் பார்த்தால், புத்தர் பெருமானே நேரில் இங்கு விஜயம் செய்வது போலுள்ளது. அவ்வளவு பக்தியுடன் வரவேற்க பல ஒழுங்குகளும் செய்திருக்கின்ருர்கள்.

* * *

சீனத்திலே இவ்விதமான ஒரு தந்தம் இருந்த சமாச்சாரம் பலருக்கும் இதுவரை தெரியாது. இது புத்தர் பெருமானின் உண்மையான பல் அல்ல வென்றும், பிரசாரத்துக்காகவே சீனர்கள் இதைப் பயன்படுத்துவதாயும் சிங்களப் பத்திரிகைகளில் வாக்குவாதங்கள் நடந்தன. அந்த வாக்குவாதத்தில் மற்ருெரு பேச்சும் அடிபட்டது. அதாவது கண்டி தலதமாளிகையிலிருந்த புனித தந்தத்தை பேர்ச்சுகீயர்கள் கைப்பற்றி நாசமாக்கிவிட்டதாயும் இப்போதிருப்பது உண்மையானதல்லவென்றும் வாதிக்கப்பட்டது.

இதெல்லாம் எப்படியாயினும் சரி. "யத் பாவம் தத் பவதி" என்பது வேதவாக்கு. மனதில் ஒன்றை எப்படிநினைக்கிருேமோ, அது நமக்கு அப்படியே ஆகின்றதாம். ஆகவே சீனத்திலிருந்து இன்று வரும் தந்தம் இங்கு புத்தர்பெருமானே நேரில்மீண்டும் விஜயம் செய்வதுபோல்பலர் எண்ணுவதாயின் அதில்தவறில்லை. இந்த தந்தத்தின விஜயத்தால், இங்கு மக்கள் புத்தர் பெருமான் உபதேசித்த, அஹிம்சை, திருடாமை, மதுவிலக்கு, வாய்மை, கற்புநெறி இவற்றை இனி அதிகம் பின்பற்றினல், அது இந் நாட்டுக்கும் மக்களுக்கும் மிகவும் நன்மையாகும்.

* * *

இன்று உண்மையாகவே புத்தர் பெருமான் இந்த 'தர்ம துவீப'த்துக்கு வருவதாகவைத்துக்கொள்வோம். (வருவது அவ்வளவு சுலபமல்லதான். பாஸ்போர்ட், விஸா, ஊசிகுத்தல், கஸ்டம்ஸ், கைகாட்டல், செலாவணி முதலிய கஷ்டங்களுக்கெல்லாம் தப்ப வேண்டும். அதுவும் இந்தியா மார்க்கமாக என்ருல் அனுமதி கிடைப்பது கஷ்டம். இப்போது விஸா வரிச் சட்டம் வேறு அமுலுக்கு வந்துள்ளது. 3 மாதங்களுக்கு மேல் இங்கு இருப்பதாயின் ரூ. 400 கட்டவேண்டும். மத சம்பந்தமானவராக இருப்பதால் அவருக்கு வரிவிலக்குக்கிடைக்கக் கூடும்.)

அவர் இங்கு வந்து, அவரது பெயரால் சிலர் செய்யும் காரியங்களையும் நாடுள்ள நிலைமையையும் பார்த்தால் அவர் இங்கேயே பல வருடம் முகாம் போட நேரிடுமல்லவா?

* * *

"பசு புல்லைத் தின்றது" என்பதற்கு செயப்பாட்டுவினை என்ன தெரியுமா? "புல் பசுவைத் தின்றது" இதை நான் சொல்லவில்லை. பகடியுமல்ல. அனுராதபுரப் பகுதியிலே ஓர் ஆசிரியர் தமது மாணவர்களுக்கு இப்படிச் சொல்லிக் கொடுத்ததாயும், இக்கால ஆசிரியர்களில் சிலர் இப்படி இருப்பதாயும் வித்தியாதரிசி எச். எம். பெரேரா ஒரு பள்ளிக்கூட கூட்டத்தில் தெரிவித்தார்.

வடமாகாணத்திலே இப்படியாக ஓர் ஆசிரியரும் இருக்க முடியுமா?

# பிரஜாவுரிமை வழக்கில் உதவி மேயருக்கு வெற்றி

## "வெளியேற்ற முடியுமா என்றுதான் ஆராய்ந்திருக்கின்றனர்"

—நீதியரசர்

கொழும்பு, வெள்ளி

**"மனுதார் இந்தநாட்டுப் பிரஜையாவதற்குத் தகுதியுடையவர்தானு என்ற நோக்கத்துடன் ஆராயாமல் அவரை வெளியேற்றும் நோக்கத்துடனேயே அதிகாரிகள் ஆராய்ந்துள்ளனர்" என்று பிரஜா உரிமை அப்பீல் வழக்கொன்றில் தீர்ப்பளிக்கையில் நீதியரசர் டி. எஸ். பெர்னுண்டோ குறிப்பிட்டார்.**

தன்னையும் தனது மனைவியையும் தனது எட்டுப்பிள்ளைகளையும் இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்ய வேண்டுமெனக் கோரி, கொட்டாஞ்சேனை பிக்கரிங்ஸ் வீதியைச் சேர்ந்த திரு மைக்கேல் ஞானப்பிரகாசம்பிள்ளை ஆரோக்கியசாமி தாக்கல் செய்திருந்தமனுவை, இந்தியர் பாகிஸ்தானியர் பிரஜாபதிவுக் கமிஷனர் நிராகரித்ததை ஆட்சேபித்து அப்பீல் செய்யப்பட்ட வழக்கில் தீர்ப்பளிக்கையிலேயே நீதியரசர்பெர்னுண்டோ மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பிரஜா பதிவுக் கமிஷனரின் கட்டளையை ஒதுக்கிவைத்து, திரு. ஆரோக்கியசாமி அவரது மனைவி பிள்ளைகள் ஆகியோரை இலங்கைப் பிரஜைகளாக்கும்படி கோரிய மனுமீது, இலங்கைப் பிரஜைகளாகப் பதிவு செய்வதற்கு பிரஜாவுரிமைச் சட்டத்தின் கீழுள்ள இதர நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நீதியரசர் பிரஜாபதிவுக் கமிஷனருக்கு உத்தரவிட்டார்.

அப்பீல்செலவு தொகையாக 105 ரூபாய் திரு. ஆரோக்கியசாமிக்குக் கொடுக்கப்பட்டது.

**உதவிமேயராக பதவி வகித்தவர்**

இதற்குமுன் திரு. ஆரோக்கியசாமியின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் திரு. எஸ். நடேசன் கியு. ஸி. பின்வருமாறு குறிப்பிட்டார்.

திரு. ஆரோக்கியசாமி பல வருடங்களாக இலங்கையிலிருந்திருக்கிருர். 1943-ம் ஆண்டு நவம்பர் மாதம் இந்தியாவில் திருமணம் செய்த திரு. ஆரோக்கியசாமி அதே வருஷம் டிசம்பர் மாதம் இலங்கைக்கு வந்து சேர்ந்தார். அவர் நுவரேலியாவில் வசித்துவந்தார்,

நுவரேலியாவில் அவர் வர்த்தகம் செய்துவந்தார். சுமார் ஏழு வருடங்கள் நுவரேலியா மாநகரசபை அங்கத்தவராகப் பதவிவகித்த அவர், 1952ம்வருடத்திலிருந்து 1954ம் வருடம வரை உதவி மேயராகப் பதவி வகித்திருக்கிருர்.

இங்கிலேயில், கமிஷனர் சார்பில் ஆஜரான முடிக்குரியதரப்பு வழக்கறிஞர் திரு. ஈ. ஆர். டி. பொன்சேகாவிடம், திரு. ஆரோக்கியசாமி இலங்கைப் பிரஜையாவதற்கு அனுப்பிய மனுவை கமிஷனர் நிராகரித்ததற்கு ஆதாரமாக எவ்வித சாட்சியமும் உண்டா? என்று நீதியரசர் கேட்டார்.

திரு. ஆரோக்கியசாமியின் மனு நிராகரிக்கவேண்டியேற்பட்ட காரணங்களை திரு. பொன்சேகா விளக்கியபின், திரு. ஆரோக்கியசாமியும் அவரது குடும்பமும் இலங்கைப் பிரஜைகளாவதற்கு தகுந்த ஆதாரமுண்டு என்று கூறினுர்.

கமிஷனரின் உத்தரவைத் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்த நீதியரசர் இதற்குரிய காரணத்தை பின்னர் அறிவிப்பதாகச் சொன்னுர்.

திரு. ஆரோக்கியசாமியின் மனுவைப் பரிசீலனை செய்தவர்கள் தவருன முறையில் அதை அணுகியுள்ளனரென்றும் மனுதார் இலங்கைப் பிரஜையாவதற்கு தகுதியுடையவர்தானு? என்பதை நோக்கமாகக்கொண்டு ஆராயாமல் அவரை வெளியேற்றமுடியுமா? என்ற நோக்கத்துடனேயே ஆராய்ந்திருக்கின்றனர் என்றும் நீதியரசர் குறிப்பிட்டார்.

---

## தமிழ்க் கலவன் பாடசாலை சரிந்து விழுந்தது

அச்சுவேலி, சனி

சிறுபான்மைத் தமிழர் மகாசபையினுல் கடந்த ஒரு வருடத்துக்கு முன் ஸ்தாபிக்கப்பட்ட அச்சுவேலி வடக்கு தமிழ்கலவன் பாடசாலைக் கட்டிடத்தை அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கும் சமயம் பார்த்து அடியோடு சரிந்து விழுந்துவிட்டது. கூரை முழுவதும் சேதமடையக்கூடிய வகையில் அது குப்புற விழுந்துவிட்டதற்கு, தற்போது பலமாக வீசிக்கொண்டிருக்கும் காற்றே காரணமெனத் தெரிகிறது.

---

## இதுவரை 65 கோடி ரூபா செலவு

சென்னை, ஜூன் 9

தமிழ்நாட்டில் நெய்வேலி திட்டத்திற்கு இதுவரை 65 கோடி ரூபாய் செலவாகியிருப்பதாய் மந்திரி டாக்டர் சுப்பராயன் அறிவித்தார்.

## மார்க்கெட் விலைவாசிகள்

யாழ்ப்பாணம், சனி

மார்க்கெட்டிங் இலாகா (யாழ்ப்பாணக்கிளை) இவ்வாரம், சில்லறையாக காய்கறிகளை விற்கும் விலை கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிக்கப்பட்டவிலைக்கு பொதுமக்கள் காய்கறிகளை வாங்கலாம்.

| | | ரூ—ச |
|---|---|---|
| கோவா | ருத்தல் | 0 - 55 |
| புடலங்காய் | " | 0 - 18 |
| கத்தரிக்காய் | " | 0 - 38 |
| போஞ்சி(பட்டர்) | " | 0 - 65 |
| போஞ்சி(மற்றரகம்) | " | 0 - 65 |
| காரட் | " | 0 - 75 |
| லீக்ஸ் | " | 0 - 55 |
| சாம்பல் வாழைக்காய் | " | 0 - 15 |
| பிஞ்சுமிளகாய் | " | 0 - 60 |
| வெண்டைக்காய் | " | 0 - 45 |
| பொன்னுங்காணி | " | 0 - 22 |
| வல்லாரை | " | 0 - 90 |
| பூசனிக்காய் | " | 0 - 14 |
| சுத்தமானநெய்போத்தல் | | 6 - 50 |
| நாட்டு பச்சை அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 65 |
| புழுங்கல் அரிசி (தலைவெட்டியது) | கொத்து | 0- 75 |
| புளி | " | 0 - 85 |
| தேங்காய் எண்ணெய் | போத்தல் | 0 - 80 |
| எள் எண்ணெய் | " | 2 - 50 |
| வெள்ளைப்பூடு, (மார்க்கெட்நிலை) | ரூ. | 1 - 47 |

**கட்டுப்பாட்டு விலை**

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு (இந்தியா) | 0 - 33 |
| உருளைக்கிழங்கு (இத்தாலி) | 0 - 27 |
| மிளகாய் (1-ம் நம்பர்) | 1 - 24 |
| ஸயாம் மிளகாய் | 1 - 03 |
| சின்னச் சீரகம் | 0 - 98 |
| மஞ்சள் | 0 - 57 |
| ஜப்பான் மல்லி | 0 - 95 |
| உளுந்து | 0 - 32 |
| பாசிப்பயறு | 0 - 36 |
| துவரம்பருப்பு | 0 - 30 |
| கடலைப்பருப்பு | 0 - 48 |
| சிந்தாமணிக் கடலை | 0 - 43 |
| பம்பாய் வெங்காயம் | 0 - 20 |
| வெள்ளைப்பூடு (பம்பாய்) ருத்தல் | 0 - 35 |

முருங்கைக்காய் 1க்கு 0 - 40 சதம். மிளகு 1 ருத்தல் ரூ. 3 - 22. (கட்டுப்பாட்டு விலை இல்லை)

## மாதாஜி

மாவிட்டபுரம், வெள்ளி

திருகோணமலை சிவானந்தா தபோவனத்தைச் சேர்ந்த மாதாஜி அவர்கள் மயிலிட்டி கிராமச் சங்கத்து உறுப்பினரும், கட்டுவன் திவ்விய ஜீவன சங்கப்பிரமுகருமான திருமதி அழகம்மா இல்லத்தில் தற்போது தங்கியிருக்கிருர்கள். இங்கு சில ஆலயங்களில் சமயச்சொற்பொழிவுகள் நிகழ்த்துவார் என்றும் தெரிகிறது.

---

# கோப்பாய் ஆஸ்பத்திரியில் மருந்து தட்டுப்பாடு

கோப்பாய், சனி

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியில் மருந்துவகைகள் இல்லாதிருப்பதனுல் ஏழை மக்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிருர்களென்றும் இதற்கான மருந்துகளை உடனடியாக அரசினர் விநியோகிக்க வேண்டும் என்றும் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் ஓர் தீர்மானம் கோப்பாய் அம்மன் கோயிலடி சனசமூக நிலையக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை திரு. டி. சிவஞானம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன:

கோப்பாய் அரசினர் ஆஸ்பத்திரியிலுள்ள சாக்கடை வாய்க்காலில் சாக்கடை தேங்கி நிற்பதனுல் அப்பகுதிச் சுகாதாரம் பாதிக்கப்படுவதோடு இதிலிருந்து கிளம்பும் துர்நாற்ற வாடை அயலில் குடியிருப்பவர்களுக்கும் பிரயாணஞ் செய்வோருக்கும் அருவருப்பை ஏற்படுத்துகிறது. இதுபற்றிப் பலதடவை முறையிட்டும் சுகாதாரப் பகுதியினர் எதுவித நடவடிக்கையும் எடுக்காதது சுகாதாரப் பகுதிக்கே இழுக்கு ஏற்படுத்தும். ஆகவே சுகாதாரப்பகுதி இதுபற்றி உடன் கவனஞ்செலுத்த வேண்டுமெனக் கோருகிறேம்."

கோப்பாய் வடக்கு தபாற்கந்தோர் "ஏ" பிரிவில் உயர்த்தப்பட்டுப் பல மாதங்களாகியும் தபால் பட்டுவாடா தந்தி வசதியாகியன அங்கில்லா அங்கில்லாதிருப்பது பெருங்குறையாகும். இக்குறையை உடன்போக்கி இவ்வசதிகளைச் செய்துதரும்படி கேட்டுக்கொள்ளுகிறேம்.

# 15,000 க்கு மேற்பட்ட தற்காலிக வாசிகள்

## தலா ரூ. 400 கட்டும்படி கோரப்பட்டுள்ளனர்

கொழும்பு, வெள்ளி

இலங்கையிலுள்ள 15,000 க்கும் மேற்பட்ட தற்காலிகவாசிகள், ஒரு மாத காலத்திற்குள் தலா 400 ரூபாய் கட்டும்படி அரசாங்கத்தினுல் கோரப்பட்டிருக்கிருர்கள். புதிய தற்காலிக வாசவரிச் சட்டத்தின்கீழ் அவர்கள் இவ்வாறு கேட்கப்பட்டிருக்கிருர்கள். இந்த 15000 பேர்களும் விசா பெற்றிருப்பவர்கள். இவர்களது விலாசங்கள் அரசாங்கத்திடமிருக்கின்றன.

ஆனுல் விஸாமுடிந்த ஏராளமானேர் இன்னும் தலைமறைவாயிருப்பதாகக் கூறப்படுகிறது. இந்த வகையில் 25,000 க்கு மேற்பட்டோர் இலங்கையிலிருப்பதாயும், இவர்களும் வரி செலுத்துவதானுல் ஒரு கோடி ரூபாய்கிடைக்கும் எனவும் கூறப்படுகிறது. இவர்களைக்கண்டுபிடிக்க அரசாங்கம் சாத்தியமான சகல நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளும்.

---

## "பீபிள்ஸ்டெய்லி" குற்றச்சாட்டு

வாஷிங்டன், ஜூன் 9

லாவோசில் அமெரிக்கா, விமானமூலம் வலதுசாரித் துருப்புக்களை கொண்டுபோய் இறக்கி வருவதாய் நவசீனப் பத்திரிகை "பீபிள்ஸ் டெய்லி" குற்றஞ்சாட்டியுள்ளது.

---

## காஷ்மீரில் தீ விபத்து

ஸ்ரீ நகர், ஜூன் 9

காஷ்மீரில் ஏற்பட்ட ஒரு தீ விபத்தின் காரணமாய், 6 பேர் காயமடைந்தனர். 740 வீடுகள் நாசமடைந்தன. மொத்தம் 10 லட்சம் ரூபாய்க்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

## கிரிக்கெட்

பிரிஸ்பேன், ஜூன் 8

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே இங்கு நடைபெற்ற முதலாவது கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 195 ரன்கள் எடுத்து அவுட்டாகியது. ஆஸ்திரேலியா தன் முதலாவது இன்னிங்ஸில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 238 ரன்கள் எடுத்தது.

---

## ஒரிஸா தேர்தல் முடிவுகள்

புவனேஸ்வரம், ஜூன் 8

இன்றிரவு 9 மணிக்கு அறிவிக்கப்பட்டபடி ஒரிஸா ராஜ்ய சட்டசபைக்கான இடைக்காலத் தேர்தல் முடிவுகள் பின்வருமாறு:-

காங்கிரஸ் 25, கனதந்திர பரிஷத் 17, பிரஜா சோஷலிஸ்ட் 2, கம்யூனிஸ்ட் 2, சுயேச்சை 1.

---

## அங்கோலா

நியூயோர்க், ஜூன் 9

இலங்கை,ஐக்கியஅரபுக் குடியரசு. லைபீரியா ஆகியநாடுகள் அங்கோலாபற்றிச் சமர்ப்பித்த நகல்தீர்மானத்தை பாதுகாப்பு சபை தொடர்ந்து விவாதித்தது இத்தீர்மானத்தை அமெரிக்காவும், ரஷ்யாவும்ஆதரித்து வாக்களிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அங்கோலாவில் போர்த்துக்கல் கடைப்பிடிக்கும் கொள்கைபற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்து கென்யா சட்டசபை ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.

---

சகல இனத்தவர்களையும் கொண்ட ஒரு மகாநாட்டை நடத்தவேண்டுமென்ற யோசனையை தென்னுபிரிக்கப் பிரதமர் டாக்டர் வெர்வூட் நிராகரித்துவிட்டார். இது மேலும் பிரிவை ஏற்படுத்தும் என அவர் காரணம் கூறினுர்.

# மாணவர் ஆர்ப்பாட்டம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கவர்னர் ஜெனரலுக்கே அதிகாரமிருப்பதால் அவருக்கே இந்த மகஜர் அனுப்பப்படுவதாயும் அவர் கூறினுர்.

**அரசாங்க எம். பி. க்கள்**

தற்காலிக விவசாய அமைச்சரான திரு. எம். தென்னக்கூன் இதுபற்றிக் கூறுகையில் ஏற்கெனவே அரசாங்கக்கட்சி எம். பி. க்களில் 15 பேர் இந்த மகஜரில் கையொப்பமிட்டதாயும், பின்னர் அவர்களே இரண்டாவதாக அனுப்பிய மனுவில் தாங்கள், முன்னில் கையொப்பமிட்டதை வாபஸ் வாங்குவதாகக் குறிப்பிட்டிருப்பதாயும் தெரிவித்தார்.

1958 ம் வருட கலக காலத்தில் வெலிமடையிலே சட்டவிரோதமாகக் கூடி, சென்ட்ரல் ஸ்டோருக்கு வேண்டுமென்றே சேதமேற்படுத்தியதாகவும், கடை சொந்தக்காரரான டி. ஜி. பெரேரா மீது போத்தல் வீசி காயப்படுத்தியதாயும், விவசாய இலாகாவைச் சேர்ந்த பி. மணம் பேரியின் மோட்டாரை வேண்டுமென்றே சேதப்படுத்தியதாயும் திரு. ராஜரத்ன உள்ளிட்டு 8 பேர் மீது வழக்குத்தொடரப்பட்டது.

**மண்டபத்தில் மாணவர் ஆர்ப்பாட்டம்**

பார்லிமென்ட் மாளிகையில் முன்புறமுள்ள மண்டபத்திலே வித்யோதய, வித்யாலங்கார சர்வகலாசாலைகளைச் சேர்ந்த சுமார் நூறு மாணவபிக்குகளும், மற்ற மாணவர்களும் நேற்று மாலை 5 மணியிலிருந்து, இன்று காலை 6 மணிவரை உட்கார்ந்து இருந்து, பின்னர் வெளியேறினர்.

அம்மாணவர்களை வெளியேற்றுமாறு தாம் உத்தரவிட்டிருப்பதாக சபாநாயகர், சபையில் நேற்றிரவு அறிவித்தார்.

இரவு 8 மணிக்கு சபை இரவு போஜனத்துக்குக் கலைகையில், ஒரு பொலிஸ் படையினர் அங்குள்ள ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றுவதற்கு வந்தனர். ஆனுல் ஆர்ப்பாட்டக்காரர்கள் அப்படியே படுத்துக்கொண்டனர். பெரும்பாலோர் தூங்கிவிட்டனர். பொலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் அப்படியே நின்று கொண்டிருந்தார்கள்.

6 மணிக்கு மாணவ ஆர்ப்பாட்டக்காரர்கள் சென்றபின், பொலிசார் பார்லிமெண்ட் மாளிகையைச்சுற்றி முற்றுகையிட்டு, யாரையும் உள்ளே அனுமதிக்கவில்லை. பார்லிமெண்ட் கட்டட கதவுகளும் மூடப்பட்டன.

இரவெல்லாம் சபைக் கூட்டம் நடந்தபின் அதிகாலையில் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது. இனி அடுத்தகூட்டம் இம்மாதம் 22-ந் திகதி நடைபெறும்.

(மகஜர் பற்றிய மற்றவிபரம் வேறுபக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.)

# குழந்தையின் உயிருக்கு யமனுகவந்த ஒடியல்கிழங்கு

மன்னர், வியாழன்

ஒடியல்கிழங்கு தின்றதனல் 10 மாதக் குழந்தையொன்று மரணமான செய்தியொன்று இங்கு கிடைத்துள்ளது.

பள்ளிமுனை என்னுமிடத்தைச் சேர்ந்த கிரகரி என்பவரின் 10 மாத பெண் குழந்தை ராஜேஸ்வரியின் மரணம் சம்பந்தமாக திடீர்மரண விசாரணை அதிகாரி திரு. க. அலெக்சாந்தர் மரணவிசாரணை நடத்தினர்.

வீட்டிலிருந்த இதர பிள்ளைகள் பனம் ஒடியல் தின்றுகொண்டிருந்ததைக் கண்ட குழந்தை ராஜேஸ்வரியும் ஒரு ஒடியல் கிழங்கை எடுத்து வாயில்வைத்துக் கடித்ததாகவும் கடினமாக இருந்த அந்தக் கிழங்கு தொண்டைக்குள் மாட்டிக் கொண்டதாகவும் விசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது.

கடினமான ஒடியல்கிழங்கை விழுங்கியதனல் மாரடைப்பேற்பட்டு மரணம் ஏற்பட்டதாக மரணவிசாரணையின் பின் அறிவிக்கப்பட்டது.

## ஸ்ரீமதி துர்க்காபாய் ராஜினுமா அங்கீகாரம்

சென்னை, ஜூன் 8

தேசிய பெண்கள் கல்வி கவுன்சில் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக ஸ்ரீமதி துர்க்காபாய்தேஷ்முக் அனுப்பியுள்ள ராஜினமாக் கடிததத்தை யூனியன் கல்வி இலாகா ஏற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. யூனியன் கல்வி இலாகா அனுப்பியுள்ள கடிததத்தில், பெண் கல்விக்கு மூன்ருவது திட்டத்தில் உயர்ந்த மதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றும், பெண்கள் கல்வி விஷயத்தில் மற்றவர்களுக்கு இருக்கும அளவுக்கு அக்கறை, கல்வி இலாகாவுக்கு இருக்கிறது என்றும் கூறப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

## கேரளத்தில் கடும் மழை

திருவனந்தபுரம், ஜூன் 9

கேரளத்தில் சென்ற இரண்டு தினங்களாக கடும்மழை பெய்கின்றது. திருவனந்தபுரத்திலும் மற்றும் தாழ்வான பகுதிகளிலும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. இதனல் பலர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

## ரோம்நகரில் தாகூர் விழா

ரோம்' ஜூன் 9

கவியரசர் தாகூர் நூற்ருண்டுவிழா நேற்று ரோம் நகரில் கொண்டாடப்பட்டது. இக்கொண்டாட்டத்தை இந்திய கலாசார மந்திரி பேராசிரியர் டாக்டர் ஹுமாயின் கபீர் ஆரம்பித்துவைத்தார். இத்தாலியிலுள்ள அறிஞர்களும் பிரமுகர்களும் கலந்துகொண்ட இக் கொண்டாட்டத்தில் ரோம்நகர மேயர் பேசுகையில் கவியரசர் இத்தாலிக்கு வந்தபொழுது கூறிய அறிவுரைகளை இத்தாலிய மக்கள் இன்னும் நினைவில் கொண்டுள்ளனரென்ருர்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

**சனி 10-6-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை 7-15 தேர்ந்த இசை 7-30 திரைஇசை 8-00 நாகஸ்வரம் 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம் 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 இளைஞர் மன்றம் 6-15 கிராமசஞ்சிகை 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 இசைமலர் 7-15 லயவின்யாசம் 7-30 நேயர் கடிதம் 7-45 என். செல்லமுத்து—பாட்டு 8-15 அறிவுச் சுழல் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 10-00 நேயர்விருப்பம்.

**ஞாயிறு 11-6-61**

காலை 6-45 உதயகீதம் 6-50 சைவநற்சிந்தனை 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை 7-15 காலைக் கதிர் 7-30 திரை இசை 8-00 குரல் இசை 8-30 பக்திப்பாடல்கள் 9-00 இஸ்லாமியநிகழ்ச்சி 9-30 கிறிஸ்தவ நிகழ்ச்சி 11-30 சிறுவர் மலர்.

பகல் 12-15 நேயர்விருப்பம் 1-10 மாதர் நிகழ்ச்சி.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள் 5-15 ருத்திராணி நல்லநாதன்—வயலின் 5-45 திரை இசை 6-10 சிதம்பரம் கே. கோமதி—பாட்டு.

மாலை 6-30 ஈ. சுப்பையா—கிளாரினட்.

இரவு 7-00 மாதர்கேட்டவை 7-45 கலாவதி சபாரத்தினம்—பாட்டு 8-15 'ராணிரதிவதனி'—நாடகம் 8-45 இஸ்லாமிய நிகழ்ச்சி 9-15 இஸ்லாமிய கீதங்கள் 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்)

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15)

**சனி 10-6-61**

காலை 7-00 இசைக்கதிர் 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-30 கும்பகோணம் எஸ். ராமமூர்த்தி—வயலின்.

பகல் 1-00 துதிப்பாடல்கள் 2-10 கும்பகோணம் எஸ் ராமமூர்த்தி—வயலின்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 5-45 இசைப் பயிற்சி 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 'உள்ளத்திரை'—நாடகம் 8-30 டெல்லி அஞ்சல் 8-40 இசைமாலை 9-30 அகில பாரதசங்கீத நிகழ்ச்சி.

**ஞாயிறு 11-6-61**

காலை 7-00 இசைக்கதிர் 7-1[illegible] நிகழ்ச்சிக் குறிப்புகள் 7-3[illegible] தம்பிகோட்டை எஸ். ராமமூர்த்தி—புல்லாங்குழல் 8-1[illegible] சென்னை அஞ்சல்.

பகல் 12-00 நீங்கள் கேட்டவை 12-30 சூரியகாந்தி—கதம்பநிகழ்ச்சி 1-00 மணிமலர் 2-10 பெண்ணுலகம் 2-30 மெல்லிசை 3-00 "ஒலிப்படகு" சித்திரம்.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 வானவில்—நிகழ்ச்சிக் கதம்பம் 8-30 தம்பிகோட்டை எஸ். ராமமூர்த்தி—புல்லாங்குழல் 9-15 வாத்திய இசை 9-30 டெல்லி அஞ்சல் 9-45 ஒலிப்பதிவுகள்.





# மாணவர் மலர்



## இப்படியானவர்களும் இருக்கின்றனர்!

பார்மோசா தீவின் பழங்குடிகளில் மனிதரைக்கொன்று தின்பவர்களும் இருக்கின்றனர்.

கிழக்குப் பகுதியில் வசிக்கும் இந்த வகுப்பினர், சட்ட திட்டங்களுக்கோ, கட்டுப்பாடுகளுக்கோ உட்பட்டு வாழ மறுக்கின்றூர்கள்.

இவர்கள் தாங்கள் கொன்ற மனிதர்களின் மண்டை ஓடுகளை, இக்காலத்தில் பந்தயங்களில் பரிசு பெறுவோர் தாங்கள் பெற்ற பரிசுகளைப் பாதுகாத்து வைப்பதுபோல் பாதுகாத்து வைத்திருக்கிறூர்கள். மனிதரின் மண்டை ஓடுகள் நிறைந்த அறையில்தான், அவர்களின் குழந்தைகளை இரவு நேரங்களில் படுக்க வைப்பார்களாம். இப்பழக்கம் சில வகுப்பாரிடையே வழக்கமாக இருக்கிறது. இப்படித் தங்களது குழந்தைகளை இரவு நேரத்தில் மண்டை ஓடுகள் நிறைந்த அறையில் படுக்கவிடுவதற்குக் காரணம், அக்குழந்தைகள் பிற்காலத்தில் வீரம் உள்ளவர்களாக விளங்குவார்கள் என்ற நம்பிக்கையினுல் தான்.

---

## அதிக பயன் தரும் சுருமீன்

மீன்களில் பல இனமிருந்தாலும் சுருமீன் மிக விலை மதிப்புள்ளதொன்றுகும். இதனுடைய ஒவ்வொரு பகுதியும் பயன்படுத்தப்படுகிறது. பலருக்கு இது வியப்பாக இருக்கலாம். சுருவின் துடுப்புக்களைச் சீனர்கள் சிறந்த ஆகாரமாக விரும்பிச் சாப்பிடுகிறூர்கள். இதன் பற்கள் நகை செய்பவர்களுக்குப் பயன்படுகின்றன. இதன் குடலிலும் கொழுப்பிலுமிருந்து எடுக்கப்படும் எண்ணை "ஷார்க்லிவர் ஓயில்" எனப்படும்.

கால்நடைகளுக்கும், பறவைகளுக்குமான உணவை இதன் எலும்புகளிலிருந்து தயாரிப்பதுடன் மட்டுமின்றி சுருமீன் தலையிலிருந்து ஒருவித பசையும் தயார் செய்யப்படுகிறது. இதன் தோலும் பயன்படுகிறது.

---

## இலை-ஒரு தொழிற்சாலை

பார்க்குமிடங்களிலெல்லாம் பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கும் பலவித செடி, கொடிகளையும், மரவகைகளையும் நாம் கண்டிருக்கின்றேம். ஆனுல் நாம் காணும் இவைகளையும் அதன் இலைகளையும்பற்றி ஏதாவது அறிந்தோமா? அல்லது ஒரு விஞடிதான் சிந்தித்தாவது பார்த்தோமா?

ஒரு தாவரத்தின் முக்கியமான தொழில் நடைபெறும் இடம் இலைகளில்தான் என்றுல் அது மிகையாகாது.

அநேகமாக, இலைகள் பச்சை நிறமுடையனவாக இருப்பதற்குக் காரணம் 'குளோரபில்' என்ற பச்சைத்தன்மை நிறைந்திருப்பதினுல்தான். இந்தப் பச்சைத் தன்மையுள்ள இலைகள், தினம்தோறும் சில வேலைகளைச் செய்கின்றன. இவ்வேலைகளில் முக்கியமானதாக விளங்குவது மாப்பொருள் தயாரிப்பதே. இதை ஆங்கிலத்தில் 'போட்டோஸின்தசிஸ்' என்றும், தமிழில் 'ஒளித்தொகுப்பு' என்றும் கூறப்படுகிறது.

உணவு (மாப்பொருள்) தயாரிப்பதற்கு வேண்டிய சக்தியை ஒளியிலிருந்து பெறுவதினுலேயே ஒளித்தொகுப்பு என்று பெயர் ஏற்பட்டது.

தாவரங்களின் முக்கியமான தொழில்களில் ஒளித்தொகுப்புடன், ஆவியுயிர்ப்பு, சுவாசித்தல் போன்றவைகளும் ஞாளாந்த வாழ்க்கைக்கு உபயோகமானவைகளாக இருக்கின்றன. உணவுப் பொருளான மாப்பொருள்; காபனீரொட்சைட், தண்ணீர், சூரிய ஒளி ஆகியவைகளின் சேர்க்கையுடன் தயாரிக்கப்படுகின்றது.

தாவரங்களின் உணவு தயாரிப்பு பகல் நேரத்தில்மட்டுமே நடைபெறுகிறது. ஆனுல் இலைகளின் மற்றைய தொழிலான சுவாசிப்பு பகல் நேரத்தில்மட்டும் இன்றி இரவு நேரங்களிலும் நடைபெறுகிறது.

தாவரத்தின் வேர்கள் நிலத்திலிருந்து நீரை உறிஞ்சி மேற்பாகங்களுக்கு அனுப்புகிறது. இச்சமயத்தில் 'காபனீரொட்சைட்' வெளிக் காற்றிலிருந்து இலைகளின் நுண்ணிய துவாரங்கள் மூலம் ஸ்ரோமாடா) உள்ளெடுக்கப்படுகின்றது. பகல் நேரத்தில் இது நடைபெறுவதால், சூரிய ஒளியும் இவைகளுடன் சேர்க்கப்படுகின்றது.

வேரிலிருந்து உறிஞ்சப்பட்ட நீர், 'காபனீரொட்சைட்', சூரிய ஒளி இம்மூன்றும், இலையிலுள்ள பகுதிகளில் ஒன்று சேர்க்கப்பட்டு, உணவுத் தயாரிப்பு நடைபெறுகின்றது.

முக்கியமாக, தாவரங்களுக்கு வேண்டிய உணவை இலைகளே தயார் செய்வதால், இலையை நாம் ஒரு தொழிற்சாலை என்று கூறுவதில் ஐயமேதுமுண்டோ?

---

## ஈழத்தில் இலக்கிய வளர்ச்சி

**திரு. கனக. செந்திநாதன் கருத்து**

"ஈழத்தின் இலக்கியம் இரண்டாயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்தது. சங்க காலத்திலிருந்த ஈழத்துப் பூதந்தேவனுர் கால முதல் இன்றுவரை இலங்கையில் இலக்கியம் வேகமாகவே வளர்ந்துள்ளது." இவ்வாறு திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரிப் பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பு மாணவ மன்றத்தில் திரு. கனக. செந்திநாதன் கூறினுர். கழகத் தலைவர் செல்வன் க. பரராஜசிங்கத்தின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசியதாவது:

"ஈழத்துச் சிறந்த கவிதைகளெல்லாம் அநேகமானேருக்குத் தெரியாமலே மங்கிக் கிடக்கின்றன. ஈழத்துப் பூதந்தேவனுர் காலத்தின் பின் கவிதை ஆற்றின் சுவடுகள் மறைந்து யாழ்ப்பாணத்துச் செகராஜசேகரன் காலத்திய அரசகேசரியின் பின் மீண்டும் புத்திளமை பெற்றது. பிற்பாடு சின்னத்தம்பிப் புலவர் காலத்துடன் மீண்டும் வலம் பெற்றது. 200 ஆண்டுகளின் ஓட்டத்திலே கோப்பாய் சேனதிராய முதலியார், சுன்னுகம் முத்துக்குமாரக் கவிராயர் போன்றவர்கள் தோன்றிக் கவிதைத் துறைக்குப் பெருமையளித்தார்கள். இவர்களின் மாணவர்களது சிறந்த தொண்டுகளால் கவிதை ஆறு பெருக்கெடுத்தது. இக்கவிதை வெள்ளம் தடைப்படாது ஓடுவதற்கு சி. வை. தாமோதரம் பிள்ளை, கணேசையர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை போன்றவர்கள் உதவி செய்தார்கள். நாற்பதுக்கு மேற்பட்ட கவிஞர்கள் இப்போது இச்சேவையைச் செய்துவருகின்றூர்கள். குழந்தைப் பாடல்கள் பாடுவதில் வித்துவான் வேந்தனுர் இன்று முன்னணியில் விளங்குகின்றூர். அவரது "அம்மா" என்ற கவிதை மிக அழகானது.

ஆசிரியர் 'சிற்பி'யின் பாராட்டுரையுடன் கூட்டம் நிறைவேறியது.

---

## -: குழந்தை உலகம் :-

—பாரதன்—

எங்கள் உலகம் குழந்தை உலகம்.
ஏதும் சூது அறியா உலகம்.
பொங்கும் அன்பால் நிறைந்த உலகம்.
போற்றிப் பெரியோர் வாழ்த்தும் உலகம்!

அழுதால் அம்மா ஓடி வருவாள்;
அன்பாய் முத்தம் எண்ணித்தருவாள்.
'படுடா கண்ணே கற்கண்' டென்றே
பக்கம் வந்தே அப்பா நிற்பார்!

துள்ளித்திரிவோம்; தூய்மை வளர்ப்போம்,
துடிப்புடன் காரியம் செய்து முடிப்போம்.
பள்ளி செல்வோம்; கல்வி பயில்வோம்;
பட்டம் பெற்றுப் பக்குவம் ஆவோம்!

உலகம் துதிக்கும் உத்தமர், அறிஞர்
உழைப்பால் உயர்ந்தோர் ஊழியம்செய்வோர்;
கலைகள் வளர்ப்போர் அத்தனைபேரும்
கடந்து வந்ததே குழந்தை உலகம்!

---

மாணவர்கள் பலரிடமிருந்து கதைகள், கட்டுரைகள் வந்துள்ளன. நல்ல கருத்துக்கள் நிறைந்த கட்டுரைகளை எழுதுவதுடன் மனதைக் கவரும் சில நிகழ்ச்சிகளைப்பற்றியும் எழுதி அனுப்பலாம்.

பஸ் நிலையத்திலும், புகையிரத நிலையத்திலும், கடை வீதிகளிலும் எத்தனையோ சம்பவங்கள் நாளாந்தம் நடைபெறுகின்றன. அவற்றை எல்லாம் கவனித்துச் சுவையானவற்றை எழுதலாம் அல்லவா?

தபால்பெட்டி எண்: 49,
யாழ்ப்பாணம்.

'மாணவ மலர்'
ஈழநாடு

---

## சோம்பேறி மாணவர்களை திருத்தும் வழி

இங்கிலாந்தில், சோம்பேறிகளாயிருக்கும் மாணவர்களுக்காக, புது மாதிரிப் பதிப்பொன்று கண்டுபிடித்திருக்கிறூர்கள்.

அன்னிய மொழி கற்றுக்கொள்கிற மாணவர்களுக்காக வெளியிடும் பாடப் புத்தகத்தில், கடினமான வார்த்தைகள் வருகிறபோது, அந்த இடத்திலேயே அந்தப் பதத்தின் அருகிலேயே மிகவும் சிறிய எழுத்தில் அதன் ஆங்கில அர்த்தத்தையும் அச்சிட்டு விடுகிறூர்களாம். சாதாரணமாகப் பார்க்கும் போது இது கண்களுக்கே தெரியாது. புத்தகத்துடனேயே ஒரு பூதக் கண்ணுடியும் தருவார்களாம். கடினமான பதம் வருகிறபோது அங்கே, அந்தப் பூதக் கண்ணுடியால் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். சோம்பேறியான சில மாணவர்களைத் திருத்தும் பல வழிகளில் இதுவும் ஒன்றுகயிருக்கலாம்.

## அறிவுச் செல்வம்

★ எரிமலைகள் பொங்கி வழிவதினுல் உருகிவரும் பொருள் சாம்பலாக மாறுகிறது. இச் சாம்பல் குளிர்ச்சியடைவதற்கு நூறு ஆண்டுகள் செல்லும.

★ ஆபிரிக்காவின் மிகப் பெரிய நீர் வீழ்ச்சியின் பெயர் விக்டோரியா நீர் வீழ்ச்சி. இந் நீர் வீழ்ச்சி வடக்கு. தெற்கு ஷியாவுக்கு இடையில் இருக்கிறது.

★ நீர்மட்டத்திலிருந்து ஆறரை மைலுக்கு அதிகமுள்ள ஆழமான கடல், பிலிப்பைன் தீவுகளை அடுத்து இருக்கின்றது என்று கண்டுபிடித்திருக்கிறூர்கள்.

★ உலகிலேயே மிக மிக உயர்ந்த நாடு திபெத்து தான். உலகின் உயர்ந்த மலை முடிகளால் சூழப்பட்டுள்ள இந்த நாடு. கடல் மட்டத்துக்கு 16,000 அடிகளுக்குமேலுள்ளது.



விண்வெளிப் பிரயாணத்துக்கு உதவியான ஒரு விளக்கை வாஷிங்டனிலுள்ள ஆய்கூடத்தில் விஞ்ஞானி ஒருவர் பரிசோதனை செய்கின்றூர்.


அழகிய பெனியன்! கால்மேஸ்!!

"லீடன்" தயாரிப்பு

யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!

பல தினுசுகள்! பல அளவுகள்!!

எங்கும் கிடைக்கும்.

Leyden L.I.L

இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!

அதற்கு வழி "லீடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.

உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது

"லீடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்

தொழிற்சாலை

7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# சிறிய வியாபார நிலையங்களுக்கு

## வர்த்தக வரி விலக்கப்படும்

### நிதி மந்திரி அறிவிப்பு

கொழும்பு, வெள்ளி

மூவருக்கும் குறைவான ஊழியர்களைக் கொண்ட சிறிய வியாபார நிலையங்களுக்கு, மேலதிக வர்த்தக வரி 250 ரூபாய் விதிப்பதில் விலக்களிப்பதற்கு நிதிமந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா தீர்மானித்திருப்பதாகத் தெரிய வருகிறது.

சிறிய வர்த்தக நிலையங்களுக்கு வர்த்தக வரியிலிருந்து விலக்களிப்பது பற்றியும் வர்த்தக நிலையங்களிடம் தவணை முறையில் வர்த்தக வரி அறவிடுவதுபற்றியும் ஒரு திட்டத்தை நிதிமந்திரி ஆராய்ந்து வருவதாக அறியப்படுகிறது.

இது சம்பந்தமாக தெகிவளை கல்கிசைத் தொகுதியைச் சேர்ந்த சிங்கள வர்த்தகர்களின் தூதுகோஷ்டி ஒன்று டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வாவின் தலைமையில் நேற்று நிதிமந்திரியைச் சந்தித்தது.

சிறிய வர்த்தக நிலையங்கள் வர்த்தக வரி கட்டுவது கஷ்டமென்பதை நிதிமந்திரி ஒப்புக்கொண்டதாகத் தெரிகிறது.

மூன்று பேருக்கு அதிகமான ஊழியர்களைக் கொண்ட வர்த்தக ஸ்தாபனங்களுக்கு ஷேமநல நிதித்திட்டம் ஒன்றை உருவாக்குவதுபற்றியும் இதனால் இந்த ஸ்தாபனங்களுக்கு வரி விலக்களிப்பது பற்றியும் நிதி மந்திரி தூதுகோஷ்டியுடன் விவாதித்ததாகத் தெரிகிறது.

## புதிய பிரசவ விடுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

2 மாடிகளைக்கொண்ட புதிய பிரசவ விடுதி சென்றவாரம் இயங்க ஆரம்பித்தது. பழைய கட்டிடத்திலிருந்த கர்ப்பிணிகள் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டனர். கட்டிடத்தின் கீழ்த்தட்டில், 35 படுக்கைகள் கர்ப்பிணிகளுக்காகப் போடப்பட்டுள்ளன. மேல்மாடி, பயிற்சித்தாதிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பெரிய ஆஸ்பத்திரியில் சத்திரசிகிச்சை நிலையங்கள் பழைய நிர்வாகக் கட்டிடத்தில் தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் டாக்டர் வி. மயில்வாகனம் சத்திரசிகிச்சை நிலையத்தில் பணியாற்றுகிறார். டாக்டர் டி. கே. ஷேக்ஸ்பியர் திங்கட்கிழமையும், புதன்கிழமையும் சத்திரசிகிச்சையை மேற்கொள்ளுகிறார்.

முறிவு சிகிச்சை வைத்தியர், டாக்டர் எம். எல். ராஜகருணை அநேகமாக தினசரி கடமையாற்றுகிறார்.

புற்றுநோய்க்கான ரேடியோ சிகிச்சை நிபுணர், சனிக்கிழமை தோறும் விஜயம்செய்கிறார்.

# பருத்தித்துறை எறிகுண்டு வீச்சு சம்பவம்

## இருவர் பிணையில் விடுதலை

பருத்தித்துறை, வியாழன்

பருத்தித்துறையில் இம்மாதம் இரண்டாம் திகதி நடைபெற்ற கைக்குண்டு வீச்சு சம்பவம் சம்பந்தமாக சு. நடராசா என்பவரும் ச. சிவானந்தம் என்பவரும் பருத்தித்துறை நீதவான் திரு. லத்துவஹெட்டி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர். இவர்களிருவரையும் தலா 1,500 ரூபாய் பிணையில் செல்ல அனுமதியளித்த நீதவான் இம்மாதம் 19-ந் திகதிக்கு விசாரணையை ஒத்திவைத்தார்.

இந்தக் குண்டு வீச்சு காரணமாக லொறியொன்று சேதமடைந்ததுடன் அதில் சென்றவர்களும் காயமடைந்தனர்.

## 150 ரூபாய் அபராதம்

பருத்தித்துறை, வெள்ளி

சட்ட விரோதமாக நாலு போத்தல் சாராயம் வைத்திருந்ததாக வல்வெட்டியைச் சேர்ந்த கிருட்டிணபிள்ளை பாலசுப்பிரமணியம் என்பவர்மீது தொடரப்பட்ட வழக்கில் பருத்தித்துறை நீதிபதி எதிரிக்கு 150 ரூபாய் அபராதம் விதித்தார்.

# மக்கள் சமுதாயத்தில்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் ஆர்வத்தைத் துணையாகக்கொண்டு பரவின.

### உரை நடையின் தோற்றம்

மிகப் பெரிய இலக்கியங்கள் என்றால், அவை காவியங்கள்தான், கவிதைகள்தான் என்றிருந்த காலம் போய் உரை நடையிலும் இலக்கியம் உண்டு என்பதை இருபதாம் நூற்றாண்டு நமக்குக் காட்டியது. பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகளில் பெரிய நாவல்கள் தோன்றின. இலக்கியம் என்றால், நவீனங்கள், கவிதைகள், நாடகங்கள் என்ற நிலை இப்போது வந்திருக்கிறது.

### தேசியத்தின் எழுச்சி

இருபதாம் நூற்றாண்டில் நம் நாட்டில் தோன்றிய இலக்கியவாதிகள் எல்லாரும் தேசியத்தைப்பற்றித்தான்பாடினார்கள், எழுதினார்கள். அப்போது இருந்த சூழ்நிலை அப்படிப்பட்டது. தேசிய இயக்கம்தான் நமக்குப் பாரதியைத் தந்தது. பாரதியார் உண்மையின் ஆணிவேரை அப்படியே காட்டும் வலிமையும் ஆற்றலும் பெற்றவர். பெரிய சிந்தனையாளர்களை எழுத்தாளர்களை, கவிஞர்களை அவருடைய எழுத்து உண்டாக்கியிருக்கிறது. நாமக்கல் கவிஞர் தமிழுக்குக் கிடைத்த உயர்ந்த கவிஞர். உரைநடையைவிட நெஞ்சிலே இந்தப் பக்கம் புகுந்து அந்தப் பக்கம் வந்துவிடக் கூடிய கூர் வாய்ந்தது கவிதை.

மறுமலர்ச்சி இலக்கியத்திற்கு வேகம் தோன்றியது 1930 லிருந்து 1950 வரைதான் என்று சொல்லலாம். உரை நடை இலக்கியங்கள் காந்தியம், விடுதலை இயக்கப் போராட்டம், மூடப்பழக்கங்களை எதிர்க்கும் சீர்திருத்தம் பற்றிய கருத்துக்களை வெளிப்படுத்தின. வ. உ. சி. இருந்தார்; நேரடியாகப் போராடினார். அதே சமயத்தில் இலக்கியத்திலும் பற்றுதல் கொண்டிருந்தார். வ. வே. சு. ஐயர் புரட்சிகரமான திட்டங்களைப் போட்டுச் செயலாற்றினார். அதேசமயம் குறளையும் இராமாயணத்தையும் மொழி பெயர்த்தார். அப்போது நாட்டுப் பணி புரிபவர்களே இலக்கியப் பணியும் சேர்ந்து செய்திருக்கிறார்கள். நாட்டுப் பணி வேறு இலக்கியப் பணி வேறு என்று அவர்கள் பிரித்துப் பார்க்கவில்லை நாட்டுத் தொண்டே மொழித் தொண்டு என்ற கொள்கை அவர்களிடத்தில் இருந்திருக்கிறது. அவ்வாறு இல்லாவிட்டால், நல்ல இலக்கியங்கள் அவர்களிடம் எழுந்திருக்க மாட்டா.

### எழுத்தாளர் கடமை

விடுதலை பெற்ற நாம் அப்போதே ஒரு வெறியை ஊட்டத் தவறிவிட்டோம். முழு விடுதலையை நாம் பெறவில்லை. இன்னும் பசி, பட்டினி, வறுமை, இவற்றிலிருந்து பெறவேண்டிய விடுதலை பாக்கியிருக்கிறது என்ற உண்மையை மக்களிடம் காட்டாமல் இருந்துவிட்டோம். விடுதலைபெற இயங்கிய இலக்கியங்கள் மக்களிடமாற்றூண்டி அவர்களை உழைக்கச் செய்யவில்லை. 1950 க்குப்பிறகு இலக்கியம் நேர்மையிலிருந்து நழுவி, இலக்கியத் தன்மையற்று ஒரு போலியான கௌரவத்தை மக்களிடம் பெற்றுவிட்டது. கடமையுணர்ச்சியையும், உழைப்புச் சக்தியையும் தூண்டிவிடுவதுபோல், மலிவான வாழ்க்கையை, ஒழுக்கக் கேடான வாழ்க்கையைப் பரப்பும் இலக்கியங்கள் வளருகின்றன. இது தடை செய்யப்பட வேண்டும். ஆண்களைப் பேடிகளாகவும், பெண்களை ஒழுக்கம் கெட்டவர்களாகவும் ஆக்க ஒரு சில பத்திரிகைகள் இருக்கின்றன. தனி மனித சுதந்திரமென்று புலிக்குணத்தோருக்குச் சுதந்திரம் கொடுத்தால் ஆட்டு மந்தை அழிந்துவிடும். பல கேடுகள் பரவும். நல்லவைகளுக்கு ஆக்கம் தரத் தயங்கக் கூடாது. ஆனால் தீமைகள்வளர வாய்ப்பளிக்கக்கூடாது. இல்லாவிட்டால் எதிர் காலம் நமக்குச் சோதனையாகிவிடும்.

நம்முடைய மொழி அருமையான மொழி. பல பேரிலக்கியங்களைத் தந்திருக்கும் மொழி. எந்தக் கருத்தையும் அழகாக வெளிப்படுத்தும் சக்திவாய்ந்த மொழியை வைத்துக்கொண்டு மக்களுக்கு நல்லதைச் சொல்லாமல் தீமையை வளர்க்க வேண்டுமா? வேண்டாம். நமக்கிருக்கும் எதிர்காலத்தை ஒளிபொருந்தியதாகஅமைப்போம்.

[சென்னை காந்தி மன்றத்தில் 'சமுதாயம்-இன்றும் இனியும், என்னும்பொருள்பற்றிப்பிரபல எழுத்தாளரும் சிறுகதை ஆசிரியருமான திரு. அகிலன் ஆற்றிய விரிவுரையின் சாரம் இது]

அழைக்கிறோம்

எங்கள் சாறி மாளிகைக்கு

பங்குபற்றுங்கள்

எங்கள் இருப்பு எடுக்கும்

விற்பனையில்

12-6-61 — 30-6-61

எல்லாப் பிடவைகளின் விலைகளிலும்
எதிர்பாரா இறக்கம்.

மறுமுறை பெறமுடியாத
காஞ்சிபுரம், மணிப்புரி, காஷ்மீர், டக்கா
கைத்தறிச் சேலைகளை
இத்தருணத்தில் சகாய விலையில்
பெற்றுக்கொள்ளத் தவறாதீர்கள்.

பலவகையான "றெடிமேட்ஸ்", பப்பிலின்ஸ், சீத்தைகள், சோளிகள், லோன்ஸ், நைலோன்ஸ், சூட்டிங்ஸ், ஷேட்டிங்ஸ் மற்றும் பல ஏராளமாக விற்பனைக்குண்டு.

கொள்வனவில் 5 வீத கழிவு

டயரும்ஸ்

54 - 60, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)

நவா (கும்பனித்தெரு) மொடர்ன் (பதுளை)



பாலாஜி ★ பண்டரிபாய்
ராஜகோபால் ★ மைனாவதி
ஏ. கருணாநிதி ★ எம். சரோஜா
நடித்த

எங்கள் குலதேவி

எல்லோரும் பார்த்து மகிழ வேண்டிய
ஓர் குடும்பச்சித்திரம்.

டைரக்ஷன்: ஏ. சுப்பராவ்
சங்கீதம்: கே. வி. மகாதேவன்

வெலிங்டன் (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 5-30 மணிக்கு மட்டும்
சனி, ஞாயிறு காலை 10 மணி, பி. ப. 1-30 மாலை 5-30 மணிக்கும்

எம். ஜி. ராமச்சந்திரன் - பி. எஸ். சரோஜா
நடித்த

புதுமைப்பித்தன்

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி காலை 10-30, பி. ப. 5-45க்கும் சனி, ஞாயிறு பி. ப. 2-30, 5-30க்கும்

ராமராவ், சாவித்திரி, ரங்கராவ் நடித்த

சந்திரஹாரம்

தினசரி 2-00, 3-45க்கு — சனி, ஞாயிறு 10-30க்கும்

பிரிஜட் பாடோ நடித்த

வுமன் லைக் சேற்றன்

WOMAN LIKE SATAN (ENGLISH

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு ஜூன் மாதம் 10-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.